பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 02 வியாழக்கிழமை 19.09.2019 கதிர் 318

**இனிது ரகசியம் அல்ல!**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்புக் குறித்து நேற்று இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். நேற்று அந்த பக்கம் 02

# ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16ஆம் திகதி

## வேட்புமனு ஒக்ரோபர் 7 முதல் ஏற்பு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 19

இலங்கை அரசியலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அடுத்த மாதம் (ஒக்டோபர்) 7ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று மாலை அறிவித்துள்ளது. பக்கம் 03

# நாமல் ராஜபக்ஷ எம்.பியின் திருமணத்தில் தேவகௌடா!





கொழும்பு, செப். 19

நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷவின் திருமண பக்கம் 03

# ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக கரு!

## பங்காளிக் கட்சித் தலைவர்கள் இன்று கூடி முடிவெடுப்பர்

கொழும்பு, செப். 19

ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று நடைபெறவுள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சபாநாயகர் கரு ஜயசூரிய களமிறங்கவுள்ள நிலையிலும் – அதற்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ள நிலையிலும் – இன்றைய இந்தக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையவுள்ளது. பக்கம் 03


# ரணிலைக் கைது செய்ய உயர்மட்ட ஆலோசனை!

கொழும்பு, செப். 19

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகாரத்தை முன்வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்யலாமா என்பது தொடர்பில் அரசின் உயர்மட்டத் தலைவர் பக்கம் 03

# புலிகளால் நடப்பட்ட தேக்கு மரங்களை தறித்து எடுக்கும் வனவளத் திணைக்களம்

## கிராம மக்கள் கடும் விசனம்



வவுனியா, செப். 19

தமிழீழ விடுதலைப் புலிகளால் நடப்பட்ட தேக்கு மரங்கள் வனவளத் திணைக்களத்தால் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படு பக்கம் 03

# மைத்திரிக்கு பதிலடி கொடுத்தார் மஹிந்த

## சீன நிதி மோசடிக் குற்றச்சாட்டு குறித்து விசேட அறிக்கை

கொழும்பு, செப். 19

தாமரைக் கோபுர திறப்பு விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால முன்வைத்த குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக நிராகரித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, பக்கம் 03

# ஐ.தே.க. எம்.பிக்களுக்கு ரணில் அவசர அழைப்பு

## அலரிமாளிகையை நோக்கிப் பலர் படையெடுப்பு

கொழும்பு, செப். 19

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது என அறிவிப்பு வெளியாகியுள்ளநிலையில், ஐக்கிய தேசியக் பக்கம் 03

# முன்னாள் எம்.பி. ஹிஸ்புல்லாவின் பழைய கொடுப்பனவு மீள அறவீடு?

கொழும்பு, செப். 19

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் பழைய பக்கம் 03

# சீனாவை அவமதித்த மைத்திரிபால உரிய விளக்கத்தை வழங்கவேண்டும்

## உதய கம்மன்பில பாய்ச்சல்



கொழும்பு, செப். 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பானது சீனாவை அவமதிக்கும் செயலாகும். எனவே, தவறை ஏற்று தனது உரை தொடர்பில் பக்கம் 03

# பத்து வீதமான அரச ஆசிரியர்கள் சேவைக்கு லாயக்கற்றவர்களாம்!

## ஆய்வுத் தகவல் என்கிறார் ஜனாதிபதி



குருநாகல், செப்.19

இந்நாட்டில் அரச ஆசிரியர் சேவையிலுள்ள இரண்டு லட்சத்து 80 ஆயிரம் பேரில் 10 வீதமானோர் ஆசிரியர் சேவைக்கு பொருத்தமற்ற பக்கம் 03

# காணாமற்போனோர் செயலகத்தை மூடக் கோரித் தொடர் போராட்டம்!



யாழ்ப்பாணம், செப். 19

கல்வியங்காட்டில் திறக்கப்பட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தை அகற்றுமாறு கோரி, வலிந்து காணாமல் பக்கம் 03

# அரச சேவையில் 180 நாள்கள் தற்காலிகமாக பணிபுரிந்தோருக்கு உடனே நிரந்தர நியமனம்

## அமைச்சரவை செவ்வாயன்று அங்கீகாரம்

கொழும்பு, செப்.19

அரச நிறுவனங்களில் இணைத்துக்கொள்ளப்பட்டு 2019.09.01 ஆம் திகதியில் 180 நாள்கள் பணி புரிந்த தற்காலிக, நாள் சம்பள, ஒப்பந்த, நிவாரண, பதில் நியமன ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பக்கம் 03

# சாட்டிக் கடற்கரையை சீரமைப்பதற்கு உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 19

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களில் ஒன்றான சாட்டி கடற்கரையைச் சீரமைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பக்கம் 03

# முறையான உத்தரவாதங்கள் இல்லாமல் ஐ.தே.கவை ஆதரிப்பது அழிவுக்குச் சமம்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் எச்சரிக்கை

கொழும்பு, செப். 19

தமிழ் தரப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும். சர்வதேச சமூகத்தின் அனுசரணையில் வேட்பாளர்களிடம் இருந்து உத்தரவாதத்தைப் பெற்று, அதன் பின்னரே ஆதரவு வழங்க வேண்டும். அதை விட்டு, சரியான உத்தரவாதங்கள் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மீண்டும் ஐ.தே.கவை ஆதரிப்பது அழிவிற்குச் சமனானது என எச்சரிக்கை விடுத்துள்ளார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சம்பந்தர், ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில், தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டமாக எதை வைத்திருக்கிறீர்கள் என்றுதான் சம்பந்தன் தரப்பிலிருந்து கேட்டதாகச் செய்திகள் வந்தன. எமது பிரச்சினைகளை குறிப்பிட்டு, எமக்கு இவை இவை தேவையென குறிப்பிட்டனர் எனத் தெரிய வரவில்லை.

மைத்திரிபாலவை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக, மைத்திரி நல்லவர், வல்லவர் எனத் தமிழ் மக்களிடம் கூறி, அவருக்கு வாக்களிக்கும்படி சம்பந்தன் கூறினார். தமிழ் மக்கள் வாக்களித்து, மைத்திரி வெற்றி பெற்றார். இப்பொழுது ஐந்து வருடம் முடியும்போது மைத்திரி எங்களை ஏமாற்றி விட்டார் என கூட்டமைப்பினர் சொல்கிறார்கள்.

இவ்வாறான சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ரெலோ, புளொட், தமிழரசு கட்சி மற்றும் வெளியில் இருந்து செயற்படும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி போன்ற பல கட்சிகள் உள்ளன. இதில் யார் யார் பொதுக்கோரிக்கைகளின் அடிப்படையில் ஒன்றிணைக்கிறார்களோ, அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொதுக்கோரிக்கைகளை முன்வைத்து, அதை நிறைவேற்றுவதாகக் குறிப்பிடுபவருக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கலாமே தவிர, நீங்கள் என்ன தீர்வுத் திட்டத்தை வைத்திருக்கிறீர்கள் எனக் கேட்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

ஏனெனில், இங்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விடயத்தை சொல்வார்கள். சஜித் பிரேமதாஸ ஒரு திட்டத்தை வைத்திருக்கலாம். ரணில் இன்னொரு திட்டத்தை வைத்திருக்கலாம். கோட்டாபய அபிவிருத்தி செய்கிறேன் என்று கூறக்கூடும். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதல்ல விடயம். நாங்கள் எல்லோரும் இணைந்து பொதுவாக என்ன கோரிக்கையை வைக்கப் போகிறோம், அதை இவர்கள் தீர்ப்பார்களா இல்லையா என்பதையே கவனிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது ஒரு வருட அவகாசம் கேட்டுள்ளார். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் வைத்து மூன்று வருட அவகாசம் கேட்டார். ஏற்கனவே நான்கரை வருடம் நாடாளுமன்றம் அரசியல் சாசன சபையாக இயங்குகிறது. வழிநடத்தல் குழு 83 தடவை கூடி பேசியது. இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டது. இப்பொழுது எல்லாமே குப்பைத் தொட்டிக்குள் போடப்பட்டு, எதுவுமே இல்லாமல்

அரசியல் சாசனசபையின் ஊடாக தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இங்கு யாழ்ப்பாணத்தில் காணிகள் இன்னும் இராணுவத்தின் வசம் உள்ளன. காணாமல் போனோர் விடயத்தில் எந்த பதிலும் கூற முடியாதவர்களாக இருக்கிறார்கள். அதேபோல, அரசியல் கைதிகள் விடயமும் அப்படியேதான் இருக்கிறது. ஜெனீவாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து கொண்டு வந்த தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

ஐ.நா. சபைக்கு, ஐ.நா செயலாளருக்கு, இந்தியாவிற்கு வாக்குறுதி கொடுத்தும், இதில் ஒன்றைக்கூட நிறைவேற்ற முடியாத நீங்கள், ஜனாதிபதியாக வந்து ஒரு வருடத்தில் என்னதான் செய்வீர்கள்?.

காலம்காலமாக கொடுக்கும் ஏமாற்றுத்தனமான வாக்குறுதியாகத்தான் இது தென்படுகிறதே தவிர, நிச்சயமாக இவர்கள் எதனையும் செய்வார்கள் என நான் நம்பவில்லை.

ஒவ்வொரு வரவு – செலவுத் திட்டத்தில், நம்பிக்கையில்லா பிரேரணையில், அரசு கவிழப்போகிறது என்ற சூழலில், நாடாளுமன்றத்திலும் சரி, உயர் நீதிமன்றத்திலும் சரி, ஜெனீவாவிலும், அரசைக் காப்பாற்றியதில் பெருமளவு பங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு இருக்கிறது.

அரசுடன் இணைந்து செயற்பட்டதாக, அரசைப் பாதுகாத்ததாக இவர்களே கூறுகிறார்கள். ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய சரியான பதிலை அரசிடமிருந்து பெற முடியவில்லை. காணிகள் விடுவிக்கப்படவில்லை. இந்த அரசு வந்த பின்னர் புதிய புதிய பௌத்த விகாரைகள் வடக்கு – கிழக்கில் நிறுவப்படுகின்றன. இவர்களால் நிறுத்த முடியவில்லை. புராதன சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. இவர்களால் நிறுத்த முடியவில்லை. இவர்களின் கண்ணுக்கு முன்பாகவே ஐக்கிய தேசியக்கட்சி எதிராக செயற்பட்டு வருகிறது. எந்தவிதமான உறுதிமொழிகளும் இல்லாமல் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவு கொடுப்பது அழிவிற்குச் சமமானது – என்றார். (ஐ)

## யாழ். இந்துவில் மகாபரணி உற்சவம்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எழுந்தருளி இருக்கும் ஞானவைரவர் ஆலயத்தில் நேற்றிரவு மகாபரணி பூசை சிறப்புற நடைபெற்றது. கல்லூரி அதிபர் சதா நிமலன் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வீதியுலா வந்த ஞானவைரவர் உற்சவ மூர்த்தியை கல்லூரி அதிபரும் ஏனைய ஆசிரியர்களும் சுமந்து செல்லும் காட்சி.

## ஹபரணைப் பகுதியில் விபத்து சம்பவ இடத்திலேயே 2பேர் சாவு!



கொழும்பு, செப். 19

ஹபரணைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஹபரணை – பொலனறுவை வீதியில், ஹைஏஸ் வாகனம் ஒன்றும், முச்சக்கர வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது. இருவர் உயிரிழந்துள்ளமையுடன், மூவர் காயமடைந்துள்ளனர். (ஐ)

## பெரமுன – சுதந்திரக் கட்சி பேச்சு தோல்வியடைந்தால் மாற்றுவழி

### கூறுகின்றார் தயாசிறி ஜயசேகர

கூட்டணி அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சு தோல்வியடையும் பட்சத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாற்று நடவடிக்கையில் இறங்கும். என்று அதன் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தை எம்மால் ஏற்கமுடியாது. கிராமமட்டத்திலான சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களின் நிலைப்பாடும் இதுவோகவே இருக்கின்றது.

எனவே, மொட்டு தவிர்ந்த ஏனைய பொதுச் சின்னமொன்றில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்வரவேண்டும். அப்போது கூட்டணி அமைக்கும் முயற்சியும் வெற்றிபெறும்.

சிலவேளை இரு தரப்புப் பேச்சுகள் தோல்வியடையுமானால் சுதந்திரக் கட்சிக்குச் சில மாற்று தேர்வுகள் உள்ளன. தனியாக போட்டியிடலாம். அவ்வாறு அல்லாவிட்டால் ஜே.வி.பியுடன் இணைந்து பரந்தபட்ட கூட்டணியை ஏற்படுத்தித் தேர்தலை எதிர்கொள்ளலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தனித்துவத்தை விட்டுக்கொடுப்பதற்கு நாம் தயாரில்லை – என்றார் தயாசிறி. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சி தொடர்பான நடவடிக்கைகள் அரசியல் கட்சிகள் மட்டத்தில் மும்முரமாகக் கட்டவிழ்ந்த போதிலும் அது இன்னும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறவில்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

இத்தகைய முயற்சிக்கு ஆதரவு தருவது குறித்து சாதகமாகப் பரிசீலிக்கத் தயார் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன் நேற்றுக் காலை குறிப்பிட்டமை இந்த முயற்சிக்குச் சாதகமான அம்சமாகப் பார்க்கப்பட்டது.

அதேபோல, ஜனாதிபதி, பிரதமர், தமிழ்க் கூட்டமைப்பு, ஜே.வி.பி. தரப்புகளிலிருந்தும் முழு அளவில் சாதகமான பதில் கிடைத்தது.

ஆனால், இந்த அரசமைப்புத் திருத்தத்தை ஆதரிக்க ரவூப் ஹக்கீம் மறுத்து விட்டமை நேற்று இந்த முயற்சி பின்னடைவைக் கண்டமைக்கு முக்கிய காரணம் எனக் கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த முயற்சிக்கு இணங்க மறுத்து விட்டமையால், இந்த அரசமைப்புத் திருத்தத்துக்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையை நாடாளுமன்றில் பெறுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பக்கத்தில் இருந்து குறைந்த பட்சம் 25 முதல் 30 எம்.பிக்களின் ஆதரவையாவது பெற வேண்டும் என்ற இக்கட்டு எழுந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்படி 25 முதல் 30 எம்.பிக்களின் ஆதரவு அந்தப் பக்கத்தில் இருந்து கிடைக்காத வரை இந்த முயற்சியை நகர்த்துவதை முன்னெடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையும் ஜே.வி.பி. பிரதிநிதிகளும் நேற்றுப் பேசிக் கொண்டனர் என அறியவந்தது.

மனோ கணேசன், ரவூப்ஹக்கீம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. பிரதிநிதிகள் எனப் பலதரப்பினருடனும் நேற்று இவ்விடயம் குறித்த தொடர்பாடல்களை இணைப்பாளர் போல கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. முன்னெடுத்தார் என்றும் அறிய வந்தது.

அதேசமயம், சு.கவினர் மற்றும் பொதுஜனப் பெரமுன தரப்பினர் போன்ற தரப்புகளைக் கையாளும் பொறுப்பை அமைச்சர் ரவிகருணநாயக்கா முன்னெடுத்தார் என்றும் கூறப்பட்டது.

எது, எப்படி என்றாலும், ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு வெளியாகியிருக்கும் சூழ்நிலையில் –

இன்று அல்லது நாளை இந்த விடயம் குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுத்து அதனை முன் நகர்த்தினாலன்றி, இவ்வாறு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் திட்டம் அதற்குப் பின்னர் இப்போதைக்குச் சாத்தியமாகாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆக, இந்த விடயத்தில், அது முன்நகருமா அல்லது முயற்சி கைவிட்டு விடப்படுமா என்பது இன்று அல்லது நாளை முடிவாகி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேவையான எண்ணிக்கை அளவு எம்.பிக்களின் ஆதரவு பொதுஜனப் பெரமுன பக்கத்தில் இருந்து வருவது இன்று அல்லது நாளைக்குள் உறுதியாகாவிட்டால் இந்த அரசமைப்புத் திருத்த முயற்சி துளிரோடு அடிபட்டு போவது தவிர்க்க முடியாதது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

- மின்னல் -

காலைக்கதிர் Kalaikathir



## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெறும் என்ற வர்த்தமானி அறிவிப்பைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்று இரவு வெளியிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் கட்டுப் பணம் செலுத்தும் காலம் இன்று நண்பகல் 12 மணி தொடக்கம் ஒக்ரோபர் 6ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வரையறுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளர் மனுத் தாக்கல் ஒக்ரோபர் 7 ஆம் திகதி முதல் இடம்பெறும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்து வரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 3ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

எமது உறவினர்கள் காணாமல் போகவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரை விசாரணை செய்து கண்டுபிடிப்பது என்பது வெறும் அப்பட்டமான பொய்ப் பிரசாரம். எமது பிள்ளைகள் தொடர்பான விசாரணைகளை சர்வதேசமே மேற்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்து, திங்கட்கிழமை இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## நாமல் ராஜபக்ஷ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவேற்பு நிகழ்வில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் தேவகவ்டா மற்றும் சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மஹிந்த குடும்பத்தினரால் விடுக்கப்பட்ட விசேட அழைப்பின் அடிப்படையில் இவர்கள் இந்தத் திருமண வரவேற்பு வைபவத்தில் பங்கேற்றனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## புலிகளால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன எனப் பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் பயன் தரும் தேக்கு மரங்கள் நடப்பட்டன. அவை வனவளத் திணைக்களத்தினரால் கனரக வாகனங்கள் எடுத்துவரப்பட்டு தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

நேற்றுக் காலை பன்றிக்கெய்தகுளம், ஆறுமுகத்தான் புதுக்குளம் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள மரையடித்தகுளம் இந்தியன் வீட்டுத்திட்டம் பகுதியிலுள்ள இரண்டு ஏக்கர் தேக்கு காட்டுக்குள் சென்ற வனவளத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தேக்கு மரங்களைத் தறித்துள்ளனர்.

பன்றிக்கெய்தகுளம் பகுதியில் 20 முதல் 30 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடப்பட்டு பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் பராமரிக்கப்பட்டு வந்த பயன் தரும் பல தேக்கு மரங்களே இவ்வாறு அங்கிருந்து வனவளத் திணைக்களத்தினால் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இதையடுத்து அப்பகுதியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் வனவளத் திணைக்கள அதிகாரிகளிடம் இது குறித்து கேட்டபோது, திணைக்களத்திற்குச் சொந்தமான பகுதியிலுள்ள தேக்கு மரங்களே இவ்வாறு தறிக்கப்பட்டு வருகின்றன. பெரிய மரங்கள் தறிக்கப்பட்டுப் புதிய மரங்கள் நடுவதற்காகவே இவ்வாறு தறிக்கப்பட்டு வருவதாகப் பதிலளிக்கப்பட்டது. (ஐ)



## ஐக்கிய தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் அடுத்த மாதம் (ஒக்டோபர்) 7ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதி இடம்பெறும் என்ற வர்த்தமானி அறிவிப்பைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்று இரவு வெளியிட்டார்.

இதனையடுத்து அவசர அவசரமாக இன்று காலை ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களை கூட்டத்துக்கு அழைத்துள்ளார் ஐ.தே.க. தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க.

இன்று நடக்கவுள்ள கூட்டத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவதற்கான அறிவிப்பை பிரதமர் ரணில் வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை – அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாகவும், இன்றைய இந்தக் கூட்டத்தின் பின்னரே அது இறுதி செய்யப்படும் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உடன் தன்னைச் சந்திக்குமாறு கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

இதையடுத்து அலரி மாளிகையை நோக்கி ஐ.தே.கவின் எம்.பிக்கள் தற்போது படையெடுத்துள்ளனர். (ஐ)

## சீனாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி உரிய விளக்கத்தை வழங்கவேண்டும். – என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தாமரைக் கோபுர கட்டுமானப் பணிக்காக இலங்கை அரசாங்கத்தினால் 2012 இல் சீன நிறுவனம் ஒன்றுக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்ட 200 கோடி ரூபா காணாமல் போயிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு போலியானது. மக்களை தவறாக வழிநடத்தகூடியது.

சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு 200 கோடி ரூபா அல்ல ஒரு சதம்கூடச் செலுத்தப்படவில்லை. எனவே, பணம் செலுத்தியதற்கான ஆதாரங்கள் இருப்பின் அவற்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

அத்துடன், ஜனாதிபதி கூறுவது போல் எலிட் என்ற கம்பனி காணாமல்போகவில்லை. இது இன்னும் இயங்கிகொண்டுதான் இருக்கின்றது.

ராஜபக்ஷாக்களுக்கு எதிராகப் போலிக்குற்றச்சாட்டுகளை முன்வைத்தே மைத்திரிபால சிறிசேன அன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். தற்போது ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும்வேளை மீண்டும் பழைய பல்லவியை பாட ஆரம்பித்துள்ளார்.

நாட்டின் அதேபோல் அரச தலைவர் நகைச்சுவையாளராக மாறக்கூடாது. ஆகவே, தனது பதவிகாலம் முடிவடையும் வரையில் நிதானமாக கருத்துகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஜனாதிபதியால் கூறப்பட்ட நிறுவனமானது சீன அரசுக்குரிய நிறுவனமாகும். எனவே, அவரின் அறிவிப்பானது அந்த நாட்டை கொதிப்படைய வைக்கும் என்பதுடன் சீனாவை அவமதிக்கும் செயலாகும்.

சீனாவே உலக பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்திவருகின்றது. இன்னும் சில வருடங்களில் முதல் இடத்தைப் பிடிக்கும். ஜப்பானைவிட இலங்கைக்குக் கூடுதல் உதவிகளை வழங்கி வருகின்றது. ஆகவே, அந்நாட்டுடனான உறவு மிக முக்கியமாகும்.

குறிப்பாக ஓரமாக ஒதுங்கி செல்லும் பாம்பை தடியால் அடித்துவிட்டு அது தீண்ட வருகிறது எனக் கூச்சலிடுவதில் பயன் இல்லை. பலம் பொருந்திய நாடுகளுடன் கொடுக்கல் – வாங்கல் செய்யும் போது இதைவிடவும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

எமது அரசாங்கமும் அமெரிக்காவுடன் மோதியது. ஆனால், தூரமாக சென்ற பாம்பை நாம் தடியால் அடிக்கவில்லை. எம்மை தீண்ட வந்ததாலேயே எதிர்க்க வேண்டியேற்பட்டது.

எனவே, தன்னால் தவறு இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்று அது தொடர்பில் ஜனாதிபதி விளக்கமளிக்கவேண்டும். சீனாவுடனான உறவை பலப்படுத்திக்கொள்ளவேண்டும் – என்றார். (ஐ)

## அரச சேவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முந்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில், இது தொடர்பான சுற்றுநிரூபத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் மங்கள சமரவீர, அரச நிர்வாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரச நிர்வாக 25/2014 மற்றும் 25/2014/01 ஆகிய சுற்றுநிரூபங்கள் வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களைப் பூர்த்தி செய்ய முடியாமல் போனதன் காரணமாக நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாத ஊழியர்களுக்கு இந்த நியமனத்தை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், சுற்றுநிரூபம் வெளியிடப்பட்ட பின்னர் சேவையின் தேவையின் அடிப்படையில் அரச நிறுவனங்களில் ஆரம்பத் தரங்களுக்கு உட்பட்ட பதவிகளுக்கு தற்காலிக, நாள் சம்பளம், ஒப்பந்த, நிவாரண, பதில் நியமன, நிவாரண அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, இணைத்துக் கொள்ளப்பட்டு 2019.09.01தினத்தன்று 180 நாள்களுக்கு மேலாகச் சேவையாற்றியுள்ள ஊழியர்கள் உரிய தகுதிகளை பூர்த்தி செய்யும் நிலையில் அவர்களை நிரந்தரமாக்கி, ஓய்வூதியத்துடன் நியமனம் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற உரிமையை இரத்துச் செய்வதற்கான சட்ட நடவடிக்கையை சபாநாயகர் முன்னெடுக்க வேண்டும் என அவருக்கு சட்டமா அதிபர் பரிந்துரை செய்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு அதே சமயம் மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தை அமைக்கும் ஹிரா நிறுவகத்தின் சார்பில் ஒப்பந்தங்களில் ஒப்பமிட்டார் ஹிஸ்புல்லா என்ற தவறின் அடிப்படையில் இந்த நடவடிக்கையை சபாநாயகர் கரு ஜயசூரிய எடுக்க வேண்டும் என சட்டமா அதிபர் தப்புல்ல டி லிவேரா பரிந்துரை செய்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கல்விக் கண்காணிப்புக்கான நாடாளுமன்றக் குழு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சமர்ப்பித்த தகவல்களின் அடிப்படையில் சட்டமா அதிபர் இந்தப் பரிந்துரையை வழங்கியிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இதன்படி சபாநாயகர் நடவடிக்கை எடுப்பாராயின் முன்னர் நாட்டாளுமன்ற உறுப்பினர் எனற முறையில் தாம் பெற்ற வேதனம் மற்றும் பிற சௌகரியங்களுக்குரிய பெறுமதிக்கான கொடுப்பனவுகளை பணமாக ஹிஸ்புல்லா நாடாளுமன்றுக்குத் திரும்பச் செலுத்த வேண்டியிருக்கும் எனக் கூறப்பட்டது.

## ரணிலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அதற்குப் பின்னர் சஜித்தைப் பிரதமராக நியமிக்கவும் – ஜனாதிபதித் தேர்தலுக்காகக் கூட்டணி அமைத்து சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளை இணைக்கவும், ஜே.வி.பியையும் இணைக்கவும் பேச்சு நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாடாளுமன்றுக்குள் முதலை!

தியவன்ன ஓயாவில் இருந்த முதலை ஒன்று நேற்று முன்தினம் நாடாளுமன்ற வாசல் வரை புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற நுழைவாயில் பகுதிக்கு இந்த முதலை வந்துள்ளது. அதிக மழையுடனான காலநிலை காரணமாக தியவன்னா ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் ஆற்றில் இருந்து வெளியே வந்த முதலை நாடாளுமன்ற வாசலுக்குச் சென்றுள்ளது.

நாடாளுமன்ற ஊழியர் ஒருவர் அந்த பகுதிக்குச் செல்லும் போது இந்த முதலையை அவதானித்துள்ளார். இதற்கு முன்னர் அந்த பகுதியில் இருந்து முதலை முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விமானப்படை வீரர் ஒருவர் யானை தாக்கிப் படுகாயம்!

பதவியா பகுதியில் குடிமனைக்குள் புகுந்த யானை தாக்கியதில் விமானப்படை வீரர் ஒருவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரம், பதவியா பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து கடமைக்குச் செல்வதற்காகக் காலை புறப்பட்ட விமானப்படை வீரர் ஒருவரை அப்பகுதிக் குடிமனைக்குள் புகுந்து நின்ற யானை தாக்கியுள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த அவரை அப்பகுதி மக்கள் மீட்டு நோயாளர் காவு வண்டியில் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். 40 வயதுடைய விமானப் படை வீரரே படுகாயமடைந்தவராவார். (ஐ-100)

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனத் தூதுவரை முன்னால் வைத்துக்கொண்டு சீனாவுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையிலான குற்றச்சாட்டே அதுவெனவும் சாடியுள்ளார்.

எந்த நிதி மோசடியும் இடம்பெறவில்லை என்று விசேட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மஹிந்த, இது அரசியல் ரீதியில் கடந்தகாலங்களில் பூசப்பட்ட சேறு போன்றதெனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## சாட்டிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டார். சாட்டி கடற்கரைக்கு நேற்று முன் தினம் பயணம் மேற்கொண்ட ஆளுநர் களநிலைமைகளைப் பார்வையிட்டதன் பின்னரேயே இந்த உத்தரவைப் பிறப்பித்தார். அத்துடன் அந்தப் பகுதியில் உள்ள மலசலகூடங்கள் பொதுமக்களால் சிரமமின்றிப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கக் கூடிய வகையில் பராமரிக்க வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்)

## பத்து வீதமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் என கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

குருநாகல் வெலகெதர விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற 1400 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## உயர்கல்விச் செயற்பாட்டில் இராணுவ, அரசியல் தலையீடுகள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரனைப் பதவி நீக்கம் செய்த ஜனாதிபதியின் முடிவு குறித்து அதிர்ச்சி தரும் ஆய்வுத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

யாழ் பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த கல்விமான்கள் இவ்விடயத்துக்குள் ஊடுருவி ஆராய்ந்து, சில விவரங்களைத் தொகுத்து, அதன் மூலம் சில உண்மைகளை அம்பலப்படுத்தியிருக்கின்றனர்.

உயர் கல்வியில் இராணுவ, அரசியல் மயமாக்கலின் அப்பட்டமான வெளிப்பாடே இந்தப் பதவி நீக்கம் என்பது மிகவும் அதிர்ச்சி தரும் தகவலாகும்.

இந்த விவகாரம் உயர் நீதிமன்றின் விசாரணையில் இருக்கின்றது. ஆகவே, இது குறித்துப் பொதுவெளியில் உசாவுவது சட்ட முறையற்றது என்ற வாதம் முன்வைக்கப் படலாம்.

ஆனால் இந்த விடயத்தில் தனது கவனத்தையும், ஆய்வையும் வேகமாக முன்னெடுத்து இறுதியான ஒரு தீர்ப்பைத் தருவதில் உயர் நீதிமன்றம் மெத்தனப் போக்கைக் காட்டுவது போன்ற ஒரு தோற்றம் நிலவுகின்றமையால் –

உயர் நீதிமன்றம் இது குறித்து விசாரித்து முடிவெடுக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்பது சில சமயங்களில் குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடும் கதையாகி விடக் கூடும்.

ஆகையினால் இந்த விடயம் குறித்து இப்போது பேசுவது தவிர்க்க முடியாததாகியிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

துணைவேந்தராக இருந்த பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் காரணம் ஏதும் கூறப்படாமல், முன்னறிவித்தல் ஏதும் வழங்கப்படாமல், அவரது விளக்கத்தைக் கோர வேண்டிய இயற்கை நீதி முறைமை கூடப் பின்பற்றப்படாமல், ஒரு தலைபட்சமாக அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அவரது பதவி விலக்கலை எதிர்த்து நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குத் தொடர்பில் அரசுத் தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள், அறிக்கைகளின் அடிப்படையில் நோக்கினால் –

அவர் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்தமைக்காகவோ, அல்லது அவரது கண்காணிப்பில் இடம்பெற்றவை எனக் கூறக்கூடிய ஊழல் மற்றும் நிர்வாக முறைகேடுகளுக்காகவோ, அல்லது அவரது செயற்றிறனின்மைக்காகவோ பதவி விலக்கப்படவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகின்றது.

தமிழ்த் தேசிய இன உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில், தமக்கு முன்பிருந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்களும், சக பேராசிரியர்களும், கல்விமான்களும் நடந்து கொண்ட அதே முறையில் செயற்பட்டமைக்காகவே அவர் பழிவாங்கப்பட்டிருக்கின்றார் என்பது இப்போது அம்பலமாகிவரும் உண்மையாகும்.

யாழ். பல்கலைகழகக் கட்டமைவைச் சுற்றி கடந்த நாற்பது ஆண்டுகளாகக் கட்டவிழ்ந்து வரும் தமிழ்த் தேசிய உணர்வெழிச்சிப் பிரவாகத்தின் மீதான படைத்துறையின் சீற்றம், அதிகார வர்க்கத்தின் எரிச்சல், ஆட்சியாளரின் கோபம் ஆகியவை ஒன்று திரண்டு துணைவேந்தராக இருந்த இரட்ணம் விக்னேஸ்வரனைப் பழி வாங்கியுள்ளன என்பதே இவ்விடயத்தை ஊன்றி அவதானித்து வரும் நோக்கர்களின் கருத்தாக உள்ளது.

தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தினதும், அதிகார வர்க்கத்தினதும் எதேச்சாதிகாரமான இத்தகைய போக்கைப் பார்த்திருக்கின்றமை – வளாவிருக்கின்றமை – தமிழ்ச் சமுதாயத்தைப் பொறுத்த வரை மிக மோசமான முன்னுதாரணமாகி விடும் என்பதே உண்மை.

யாழ் பல்கலைக்கழத் துணைவேந்தர் நியமனம் என்பது பல்கலைக்கழக பேரவையின் பரிந்துரையின் அடிப்படையில் ஜனாதிபதி எடுக்கும் சுயாதீனமான தீர்மானம் எனினும், இம்முறையும், கடந்த காலங்களிலும் அந்த விடயத்தில் நேரடியாகத் தமது அரசியல் செல்வாக்கை அதற்குள் நுழைத்துத் தம் கைவரிசையைக் காட்டுவதற்கு காலத்துக்கு காலம் வந்த நமது தமிழ் அரசியல் தலைமைகள் தவறவில்லை என்பது மறுக்கப்பட முடியாதது.

இரட்ணம் விக்னேஸ்வரனின் நியமனத்திலும் கூட நமது தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் – பிரகிருதிகளின் – நேரடிப் பங்களிப்பு இல்லாமல் இல்லை.

அத் தரப்புகள் கூட, தாங்கள் பதவிக்குத் கொண்டு வந்த பேராசிரியர் விக்னேஸ்வரன் இராணுவ, அரசியல் மயமாக்கலின் அடிப்படையிலான தவறான முறைமை மூலம் பதவியிலிருந்து அதிரடியாக வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதை அறிந்தும் கூட 'அதீத' – 'அமானுஷ்ய' – அமைதி காப்பது அதிசயமயமே.

அத்தலைமைகள் உண்மையைப் பகிரங்கமாக – பொது வெளியில் – பேசுவதற்கும், விவாதிப்பதற்கும், அநீதிகளைக் கண்டிப்பதற்கும் வெளிப்பட்டு வரவேண்டும்.

செய்வார்களா அவர்கள்?

# மூன்று கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் நோக்கி நடைபயணம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு

வவுனியா, செப். 19

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து, அரசியல் கைதிகளை விடுதலை செய் ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து – வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய நடைபயணம் ஒன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞரணியால் ஏற்பாடு செய்யபட்டுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபியிலிருந்து ஆரம்பமாகும் நடை பயணமானது, தியாக தீபத்தின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பயணத்துடன் யாழ்ப்பாணத்தை சென்றடையும். அனைவரும் கலந்துகொண்டு இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற தியாகி திலீபனின் கோரிக்கைகளை நிறைவேற்ற வலுச் சேர்க்குமாறு நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவினர் கோரியுள்ளனர். (ஐ)

# எழுக தமிழை வெற்றியடைய வைத்த அனைவருக்கும் நன்றி

## சுரேஷ் பிறேமச்சந்திரன் அறிக்கை



யாழ்ப்பாணம், செப். 19

தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் ஏமாற்றப் படுவதை தமிழ் அரசியல் தலைமைகளுக்கும், இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக்காட்டும் முகமாக தமிழ் மக்கள் பேரவையினால் முன்னெடுக்கப்பட்ட 'எழுக தமிழ் 2019' பேரணியை வெற்றியடையச் செய்வதில் முன்னின்று உழைத்த அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுக்கும் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு: –

தமிழ் மக்கள் பேரவையின் அறைகூவலை ஏற்று, தமிழ் மக்களின் இன்றைய அவல நிலையை இலங்கையின் ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் குறிப்பாக ஐ.நாவிற்கும் எடுத்துரைப்பதற்காக நடத்தப்பட்ட எழுக தமிழ் 2019 பேரணியை வெற்றியடையச் செய்வதில் முன்னின்று உழைத்திட்ட தமிழ் மக்கள் பேரவையின் அங்கத்துவ அமைப்புகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இன்றைய தேவையை உணர்ந்து உணர்வுபூர்வமான ஆதரவை நல்கிய பொது அமைப்புக்களுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சிரம்தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இலங்கை தமிழ்த் தேசிய இனத்தின் அவல நிலை வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த சக்திகளின் எதிர்ப்பிரசாரத்தையும் மீறி இந்தப் பேரணி வெற்றியடைந்தமையானது எமது தேசிய இனத்தின் நியாயமான கோரிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 16.09.2019 அன்று மேற்கொள்ளப்பட்ட எழுக தமிழ் 2019 பேரணிக்கு ஆதரவாக தமிழகத்திலும் கனடா, பிரிட்டன், ஜேர்மனி உள்ளிட்ட புலம்பெயர் பிரதேசங்களிலும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடைபெறும் இன்றைய காலத்தில் ஜெனிவாவிலும் அதே தினத்தில் எழுக தமிழ் 2019 பேரணிகள் நடைபெற்றமைகளத்தில் நின்று போராடும் தமிழ்த் தேசிய இனத்துக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் அளித்துள்ளது. இந்த நேரத்தில் அவர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

பேரணிகள் நடைபெற்ற இடங்கள் அனைத்திலும் ஒரே விதமான கோரிக்கைகளை முன்வைத்திருந்தமையானது எமது கோரிக்கைகளுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்துள்ளது. இனியாவது சர்வதேச சமூகம் விளிம்பு நிலையில் அல்லது நலிவடையும் நிலையில் இருக்கும் இலங்கை தமிழ்த் தேசிய இனத்தின் அடையாளத்தையும் இருப்பையும் காப்பதற்குக் காத்திரமான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்வது அவசியம் என்பதை எழுக தமிழ் 2019 எடுத்தியம்பியிருக்கிறது.

தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவரும் வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான க.வீ.விக்னேஸ்வரன் ஐயா இனப்படுகொலைக்கான சர்வதேச வரையறையை அவருக்கே உரிய பாணியில் மிகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் முன்வைத்து இலங்கை அரசு 1950இல் கைச்சாத்திட்ட ஐ.நா.பிரகடனத்தை எவ்வாறு மீறியுள்ளது என்பதை கூடியிருந்த மக்கள் மத்தியில் எடுத்துக் கூறியிருந்தார். இது சர்வதேச சமூகத்தையும் சட்டவல்லுனர்களையும் சிந்திக்க வைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், இந்திய அரசிடமும், ஐ.நா. பொதுச் செயலாளரிடமும், சர்வதேச தளங்களிலும் தான் நிறைவேற்றுவதாகக் கூறிய எந்தவொரு விடயத்தையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை என்பதுடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இணைஅனுசரணை வழங்கி எடுத்துக்கொண்ட தீர்மானங்கள் எதனையும் நிறைவேற்றவில்லை என்றும் அதனை இலங்கை அரசை நிறைவேற்ற வைப்பதினூடாகவே இலங்கைத் தமிழர்களின் மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதையும் இப்பேரணி உணர்த்தி நிற்கின்றது. எனவே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையான இணைந்த வடக்கு – கிழக்கில் ஒரு சமஷ்டி அலகை நிர்மாணிப்பதற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்து இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு சர்வதேச ரீதியிலான விசாரணையை நடத்தி எமது தேசிய இனத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தேசிய அரசு உருவாகும் என்றும் அந்த தேசிய அரசினூடாக தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் வாக்குறுதி அளித்ததற்கு இணங்க, இலங்கை தமிழ் மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தனர். ஆனால் இந்த ஐந்து வருட காலகட்டத்தில் எந்தவொரு உறுதிமொழியும் நிறைவேற்றப்படாமல் மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிக்குமாறு சிங்கள மேலாதிக்க சக்திகள் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள் மற்றும் அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதனூடாகவே இனங்களுக்கிடையில் நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் நாட்டின் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்ப முடியும். இந்த விடயங்களை இடித்துரைப்பதற்காக எழுக தமிழ் பேரணி 2019இல் அணிதிரண்ட அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம் – என்றுள்ளது. (ஐ)

**நாளை** 20.09.2019 வெள்ளி க்கிழமை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப 8.17 வரை
திதி : ஷஷ்டி பி.ப 4.46 வரை
இராகுகாலம் : 10.33 – 12.03
சுப நேரம் : 6.03 – 7.33
கபிலஷஷ்டி

## மக்கள் குடியிருப்புக்குள் அமைக்கப்படும்

# காற்றாலை மின் உற்பத்திக்கு மறவன்புலவு மக்கள் எதிர்ப்பு





யாழ்ப்பாணம், செப். 19

காற்றாலை மின் உற்பத்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து மறவன்புலவு மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகண முதலமைச்சரின் அலுவலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மறவன்புலவு பகுதியில் மக்கள் குடியேற்றத்துக்கு அண்மையில் மின் உற்பத்திக்குக் காற்றாலை அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மறவன்புலவு மக்களினால் இந்தப் போராட்டம் இடம்பொற்றது.

நேற்று வடக்கு மாகாண ஆளுநரின் மக்கள் சந்திப்பு கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிலையிலேயே போராட்டம் இடம்பெற்றது.(ஐ –07)

## வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பால் நேற்று நோயாளர்கள் பெரும் அவதி

கொழும்பு, செப். 19

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச அதிகாரிகள் முன்னெடுத்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்றுக் காலை 8 மணி முதல் 24 மணி நேரப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக வடக்கு, கிழக்கு, மலையகமென பல்வேறு பகுதிகளிலும் வைத்தியசாலைக்குச் சென்ற நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கினர். (ஐ)





## உப்பளத்தை அகற்ற எடுத்த முயற்சிக்கு மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, செப். 19

கிளிநொச்சி – குஞ்சுப்பரந்தன் பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரால் முன்னெடுக்கப்படும் உப்பளத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்ட பிரதேச சபை உறுப்பினரை அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் திட்டித் தீர்த்துத் திருப்பி அனுப்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் அந்த மக்கள் இதன்போது கடுமையாக விமர்சித்தனர்.

செருக்கன் கிராமத்தில் 30 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே உப்பளத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஜீவன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் த.குருகுலராஜா ஆகியோரே அந்தக் கிராமத்துக்குச் சென்று உப்பளத்தை அகற்றுவதற்கு முற்பட்டுள்ளனர்.

அயல் கிராம விவசாயிகளின் நன்மை கருதியே இதனைச் செய்யத் தாம் முற்படுகின்றனர் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனினும் உப்பளத்தை அகற்ற அந்தக் கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையுடன், அரசியல்வாதிகளை அங்கிருந்து செல்லுமாறு கேட்டுள்ளனர்.

“இங்குள்ள எம்.பி ஒருவர் தேர்தல் காலத்தில் வாக்கு கேட்கத்தான் வருவார். அதன் பின்னர் எங்களின் நிலை அவருக்குத் தெரியாது. அவ்வாறிருக்கையில் எமது வாழ்வாதாரத்தை வழங்கும் உப்பளத்தை அகற்ற வந்துவிட்டீர்களா” என்று மக்கள் கேள்வி எழுப்பினர். (ஐ)

## பால்மாவின் விலை உயர்வுக்கு அனுமதி

கொழும்பு, செப். 19

இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளின் விலை அதிகரிப்புக்கு அமைச்சரவையின் வாழ்க்கைச் செலவு குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதனைடிப்படையில் 400 கிராம் பால்மா பக்கற்றின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை உப குழுவால் முன்வைப்பட்டு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளுக்கான விலைச் சூத்திரத்தின் அடிப்படையிலேயே இந்த விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், செப். 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

மருதனார்மடம், றொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பொயமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் – யாழ் நுண்கலைப்பீடம், மண்டைதீவு, பூம்புகார், அல்லைப்பிடி, வெண்புரவிநாயகர், மண்கும்பான், மண்டைதீவு இராணுவ முகாம், மண்கும்பான் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில்-**

பெரியபண்டிவிரிச்சான், சின்னப்பண்டிவிரிச்சான், மடு பிரதேசம் ஒரு பகுதி, மடு நீர்ப்பாசன சபை ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.



# உயர்கல்வியை இராணுவ, அரசியல் மயமாக்கலின் வெளிப்பாடே யாழ் பல்கலை துணைவேந்தர் நீக்கம்

- கலாநிதி N. சிவபாலன், கலாநிதி S. அறிவழகன்,
கலாநிதி P.ஐங்கரன், கலாநிதிஹி.ராமரூபன், M. திருவரங்கன்,
கலாநிதி ராஜன் கூல் - தமிழில் குளோபல் தமிழ்ச் செய்திகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரனை பதவி நீக்கம் செய்வதற்கான முடிவு இந்த ஆண்டு மே மாதம் பொதுவெளிக்கு வந்தபோது, பல்கலைக்கழகத்தின் பல கல்வியாளர்கள் மற்றும் நலம் விரும்பிகள் இந்த வழமைக்கு மாறான முறைமையினால் அதிர்ச்சியடைந்தனர். இந்த அறிவிப்புக்கு முன்னர், முன்னாள் துணைவேந்தர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினாலோ அல்லது இந்த நாட்டில் உயர் கல்விக்கு பொறுப்பான எந்த அதிகாரத்தினாலோ விசாரணைக்கு அழைக்கப்படவில்லை. அவரை நீக்குவதாக அறிவிக்கும் கடிதமானது அவர் ஏன் அவரது பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்பதை விளக்கவில்லை. கல்வித்துறையில் ஒரு தலைவராக உயர் பதவியில் இருக்கும் ஒரு நபருக்கு வழங்க வேண்டிய விளக்கமளித்தல் போன்ற மரியாதை கூட இல்லாமல் ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை பதவி நீக்கம் செய்யும் ஜனாதிபதியின் முடிவு, கல்வியாளர்களை இழிவு படுத்துகிறது. கருத்துச் சுதந்திரத்தை வளர்க்கும் மற்றும் மதிக்கும் இடங்களாக பல்கலைக்கழகங்களைப் பார்த்த இளநிலை கல்வியாளர்கள் மற்றும் பொது பல்கலைக்கழக அமைப்பின் பிற ஊழியர்களை இது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகிறது.

அவரது பங்கில் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்ததற்கோ அல்லது அவரது கண்காணிப்பில் நடந்த நிர்வாக முறைகேடுகளுக்காகவோ தான் பேராசிரியர் விக்கினேஸ்வரன் நீக்கப்பட்டார் என தகுதிவாய்ந்த அதிகாரசபையின் நியமனம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சில கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் கூறினர். கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பாக அமைக்கப்பட்டதற்குப் பதிலாக புதிதாக அமைக்கப்பட்ட பொங்குதமிழ் நினைவுக்கல் திரைநீக்கம் செய்யும் நிகழ்வு போன்ற நிகழ்வுகளில் பங்கேற்றமை மற்றும் 2009 இல் முள்ளிவாய்க்காலில் நடந்த போரின் துயரமான முடிவினை நினைவுகூரும் நினைவு அமைவிடத்தை பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் நிறுவுவதைத் தடுக்கத் தவறியமை போன்றனவே பேராசிரியர் விக்கினேஸ்வரனின் பதவிநீக்கத்திற்குக் காரணம் என ஏனையோர் தெரிவித்தனர். தேசிய பாதுகாப்புச் சபையின் முந்தைய கூட்டத்தில் துணைவேந்தரை பதவி நீக்கம் செய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டதாகக் கூட சிலர் கூறினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரை பதவிநீக்கம் செய்ததில் பின்பற்றப்பட்ட நடைமுறையானது பல்கலைக்கழகச் சட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் (FUTA) ஒரு குழுவானது, நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சருடனான கூட்டத்தில் சுட்டிக்காட்டியது.

அதற்கு பதிலளிக்கையில், முழு செயன்முறையும் தேசிய பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டது மற்றும்பெறப்பட்ட தெளிவான ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்தது என்று அமைச்சர் கூறினார். இலங்கை நீதிமன்றத்திற்கு பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் தலைவர் பேராசிரியர் மோகன் டி சில்வா அண்மையில் அளித்த எழுத்து மூலமான வாக்குமூலத்தில், பேராசிரியர் விக்னேஸ்வரன் துணை வேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டிருப்பதற்கும் அதிகார துஸ்பிரயோகம் அல்லது ஊழலுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், ஆனால் அது ஓர் அரசியல் ரீதியாக ஊக்கமளிக்கப்பட்ட, இராணுவத்தின் தூண்டுதலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பான்மைவாதத்தின் சர்வாதிகார முடிவு என்றும் குறிப்பிட்டுள்ளார். பொது மன்றங்களில் அல்லது இந்த நாட்டின் கல்வி சமூகத்தால் போதுமான அளவில் விவாதிக்கப்படாத இந்த முடிவானது, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மீது கடுமையான தாக்கங்களையும், கல்வி சுதந்திரத்தின் கொள்கையை மையமாகக் கொண்டுள்ள இலங்கையில் உள்ள முழு பொது பல்கலைக்கழக அமைப்பிற்கும் கடுமையான தாக்கங்களையும் ஏற்படுத்திள்ளது.

## உயர் கல்வியினை இராணுவமயமாக்கல்

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் (FUTA) ஒரு குழுவிற்கு உயர்கல்வி அமைச்சர் அளித்த பதிலும், பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் தலைவர் சமர்ப்பித்த எழுத்துமூல வாக்குமூலமும் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் கல்வி இடங்களை வேரூன்றிய இராணுவமயமாக்கல் மற்றும் கண்காணிப்பு தொடர்பில் அதிர்ச்சியளிக்கும் சான்றுகளாகின்றன. இலங்கை இராணுவத்தின் இராணுவப் புலனாய்வு இயக்குநரகம் மற்றும் இலங்கையின் இராணுவத் தளபதி போன்ற இராணுவ இயந்திரத்தின் உயர் மட்டங்களிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நடை பெறும் நிகழ்வுகள் குறித்த தகவல்களை பல்கலைக்கழக மானிய ஆணையகமும் அதன் தலைவரும் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதும், அப்படியாக இராணுவத் தரப்பால சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளானவை பல்கலைக்கழக மானிய ஆணையகத்தின் கூட்டத்தில் கலந்துரையாடப்படுகின்றன என்பதும் இந்த எழுத்துமூல வாக்குமூலத்திலிருந்து தெட்டத்தெளிவாகின்றது. தான் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதிமன்றில் பேராசிரியர் விக்கினேஸ்வரன் தொடுத்த வழக்கில் பிரதிவாதியாக இருக்கும் பல்கலைக் கழக மானிய ஆணையகத்தின் தலைவர் அப்படியான அறிக்கைகள் சிலவற்றை அவற்றில் முக்கியமான மற்றும் வகைப்படுத்தப்பட்ட தகவல்கள் இருப்பதாகக் கூறி பேராசிரியர் விக்கினேஸ்வரனுக்குக் காட்ட மறுத்துவிட்டார். எந்தவொரு விளக்கமும் இல்லாமல் துணைவேந்தரை அகற்றுவதில் பல்கலைக்கழக மானிய ஆணையம், உயர்கல்வி அமைச்சு மற்றும் இராணுவம் ஆகியவற்றுக்கு இடையிலான இந்த வகையான தொடர்பானது போராட்டங்கள், எதிர்ப்பு



வெளிக்காட்டல் மற்றும் சனநாயகச் செயற்பாடுகளுக்கான செயற்பாட்டு வெளியைப் பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பதன் தேவையை இன மற்றும் பிராந்திய எல்லைகளைத் தாண்டி கல்விச் சமூகத்திற்கு உணர்த்துகிறது.

தமிழ்த்தேசியப் பிரகடனங்களைத் தாங்கும் பொங்கு தமிழ் நினைவுக்கல்லினை மீளமைக்கப்பட்ட பின்னர் திரைநீக்கம் செய்யப்பட்ட தமிழமுதம் என்ற நிகழ்வில் பங்கேற்றதற்காகவும் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்காகவுமே பேராசிரியர் விக்கினேஸ்வரன் துணைவேந்தர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார் என்பதனை அந்த எழுத்துமூலவாக்குமூலத்திலிருந்து ஒருவர் அறிந்துகொள்ளலாம். ஏனைய துணைவேந்தர்கள் பதவியிலிருந்த காலத்திலும் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக பொங்குதமிழ் நினைவிடம் பல்கலைக்கழகத்தின் அதே இடத்தில் இருக்கின்றது. மீளமைக்கப்பட்ட அந்த நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்ட நிகழ்விலேயே பேராசிரியர் விக்கினேஸ்வரன் பங்குபற்றியிருக்கிறார். பழைய நினைவுக்கல்லினை மீளமைக்கப்பட்ட நினைவுக்கல்லிற்கு அருகில் காணலாம். பேராசிரியர் விக்னேஸ்வரனை பதவி நீக்கம் செய்வதற்கான செயன்முறையானது இராணுவம் மற்றும் அதன் புலனாய்வுத்துறை மற்றும் ஊடகங்களின் ஒரு பகுதியால் தூண்டப்பட்ட ஒன்றாக இருப்பது அந்த எழுதப்பட்ட வாக்குமூலத்திலிருந்து தெரிகிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை பரப்புரை செய்வதற்கான வெளியை பேராசிரியர் விக்கினேஸ்வரன் வழங்கினார் என பல்கலைக்கழக மானிய ஆணையகத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட எழுத்துமூல வாக்குமூலத்தின் 10 ஆவது குறிப்புத் தெரிவிக்கிறது. இதே குற்றச்சாட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கம் அதன் உச்சத்தில் இருந்தபோது புலிகள் ஏற்பாடு செய்த நடவடிக்கைகளில் கூட அவர் ஒருபோதும் தீவிரமாக பங்கேற்கவில்லை என்பதை பேராசிரியர் விக்னேஸ்வரனை அறிந்தவர்கள் அறிவார்கள். வடக்கில் உள்ள பல கல்வியாளர்களைப் போலவே, அரசியல் உரிமைகளுக்கான தமிழ் சமூகத்தின் போராட்டத்தின் அனுதாபியாக அவர் இருந்து வந்துள்ளார். பல்கலைக்கழக மானிய ஆணையகத்தில் தற்போது சேவையாற்றும் பேராசிரியர் ராஜரட்ணம் குமாரவடிவேல் மற்றும் பேராசிரியர் விக்கினேஸ்வரன் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் அதிகாரம் மிக்கவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் கதிர்கமநாதன் கந்தசாமி ஆகியோரும் கூட தமிழ்த்தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளை உறுதிசெய்கின்ற 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குறிப்பாணை ஒன்றில் கையெழுத்திட்டவர்களாவர்.

இவை தமிழர்களின் தேசம், அவர்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளை தமிழர்தாயகம் என வரையறுத்தல் என்பனவாம். பேராசிரியர் விக்கினேஸ்வரனால் 2018 ஆம் ஆண்டு திரைநீக்கம் செய்யப்பட்ட பொங்குதமிழ் நினைவுக்கல்லில் இருக்கும் விடயங்களை ஏலவே பேராசிரியர் குமாரவடிவேல் மற்றும் பேராசிரியர் கந்தசாமி ஆகியோர் ஏற்றுக் கையெழுத்திட்டுள்ளனர்.

பேராசிரியர் விக்னேஸ்வரன் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (JUTA) தலைவராக தெற்கில் உள்ள கல்வியாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றினார். பேராசிரியர் விக்கினேஸ்வரன் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் (JUTA) தலைவராக இருந்த காலத்தில் தான், நாட்டின் உயர்கல்வித் துறையை வலுப்படுத்தவும், அபிவிருத்தி செய்யவும் வலுவான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று கோரி பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு (FUTA) யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தது. அடுத்த ஆண்டு பேராசிரியர் விக்கினேஸ்வரன் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் (FUTA) துணைத் தலைவராக பணியாற்றினார்.

பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் நடந்த நிகழ்வில் கண்டிய நடனத்தினை ஆற்றுகை செய்வது தொடர்பில் தமிழ் மாணவர்களில் ஒரு பிரிவினருக்கும் சிங்கள மாணவர்களில் ஒரு பிரிவினருக்கும் இடையில் மோதல் ஒன்று 2016 ஆண் ஆண்டில் பேராசிரியர் விக்கினேஸ்வரன் விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதியாக பொறுப்பேற்பதற்கு இரண்டு நாள்கள் முன்னர் நடைபெற்றது. பீடாதிபதியாக கடமைகளை ஏற்றுக்கொண்ட பேராசிரியர் விக்னேஸ்வரன், மாணவர்களிடையே நல்லெண்ண சூழ்நிலையை உருவாக்க தேசிய சமாதான சபையின் ஆதரவுடன் நல்லிணக்கம் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மை குறித்த பயிற்சிப்பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்தார். இரு குழுக்களுக்கிடையேயான பதற்றங்களை தணிப்பதற்கும், இன விரோதம் இல்லாமல் மாணவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடரக்கூடிய சூழலை ஊக்குவிப்பதற்கும் அவர் வகித்த அவரது செயல்திறன்மிக்க தலைமைப் பங்கு பதிவு செய்யப்பட வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான பின்னர், விக்னேஸ்வரன் பல்கலைக்கழகத்தின் கல்வி சமூகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டதும் தனக்கு அழைப்புவிடுக்கப்பட்டதுமான கிட்டத்தட்ட அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். எந்தவொரு மோதலும் இல்லாமல் பல்கலைக்கழகத்தை சீராக நிர்வகிக்கும் நோக்கில் அவர் இதைச் செய்தார். 2009 ஆம் ஆண்டில் போரின் கடைசி கட்டங்களில் இறந்தவர்களுக்கான ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட முதல் துணைவேந்தராக அவர் இருக்கலாம். பேராசிரியர் விக்கினேஸ்வரன் இந்த நினைவு நிகழ்வில் வருகைதந்தமையை மாணவர்கள் பலரும், பல்கலைக்கழக ஊழியர்களும் மற்றும் பரந்துபட்ட சமூகமும் பாராட்டினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் தமிழமுதம் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டமையால் அந்த நிகழ்வில் பேராசிரியர் விக்கினேஸ்வரன் 2018 ஆம் ஆண்டு கலந்துகொண்டார். எவ்வாறாயினும், அவர் துணைவேந்தராக இருந்தபோது இறந்த விடுதலைப் புலிப் போராளிகளை நினைவுகூரும் மாவீரர்நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்வதைத் தவிர்த்தார். கருத்தியல் காரணங்களுக்காக, இந்த நிகழ்வுகளில் சிலவற்றில் விக்னேஸ்வரன் பங்கேற்பதை ஒருவர் கேள்விக்குள்ளாக்கினாலும், துணைவேந்தர் எந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படலாம் அல்லது துணைவேந்தருக்கு எவ்வகையான அரசியல் கருத்துகள் இருக்க முடியும் என்பதை பல்கலைக்கழக மானிய ஆணையமோ அல்லது இராணுவமோ தீர்மானிக்க முடியாது. இது ஒரு தனிப்பட்ட கல்வியாளராக மற்றும் ஒரு கல்வி நிறுவனத்தின் தலைவராக அவரது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகும்.

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நினைவுகூரும் அரசியல்

கடந்த கால வன்முறைகளின் அதிர்ச்சிகரமான அனுபவங்களுடன் இன்னும் போராடும் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில், நினைவுகூருதல் என்பது மறுக்க முடியாததும் முக்கியமானதும் மற்றும்ஆற்றுப்படுத்துவதுமான சமூக மற்றும் அரசியல் நடவடிக்கையாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில், நினைவுகூரல் என்பது முரண்பாடுகள், பங்கேற்காமை மற்றும் விலக்கல்கள் போன்ற சவால்களுடனான ஒரு முரண்பட்ட பிரச்சினையாக இருக்கிறது. புலிகளின் மாவீரர்கள் ஆண்டுதோறும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊழியர்களால் நினைவுகூரப் பட்டாலும், மற்ற தமிழ் ஆயுத இயக்கங்களின் போராளிகளுக்கான நினைவு நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை. முள்ளிவாய்க்காலில் போரின் முடிவு ஆண்டுதோறும் நினைவுகூரப்படுகின்ற அதேவேளையில்,

(தொடர்ச்சி 7 ஆம் பக்கத்தில்)

(6 ஆம் பக்க தொடர்ச்சி)

புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமையைக் குறிக்கும் வகையில் எந்தவொரு நிகழ்வையும் கல்விச் சமூகம் ஏற்பாடு செய்யவில்லை. புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட புகழ்பெற்ற கல்வி மற்றும் மனித உரிமை ஆர்வலரின் வாழ்க்கை மற்றும் பணிகளை செயற்பாட்டாளரான ரஜனி திரணகமவின் வாழ்க்கை மற்றும் செயற்பாடுகளை நினைவுகொள்ளும் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்ய ரஜனி திரணகம நினைவு நிகழ்வின் அமைப்பாளர்களுக்கு 2014 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்குள் இடம் மறுக்கப்பட்டது. அவரது உருவப்படம் இன்னும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பெரும்பாலான இறந்த கல்வியாளர்களின் உருவப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கலைபீடத்தின் பொது அறையிலிருந்து விலக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நினைவுகூரலைச் சுற்றியுள்ள இந்த விலக்குகள் மற்றும் ஒதுக்கல்களை ஒருவர் விசாரிக்க வேண்டும் என்றாலும், துணைவேந்தருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி மாணவர்களும் கல்விச் சமூகமும் ஏற்பாடு செய்த நினைவு நிகழ்வுகளை தடை செய்வது சமூகத்தின் கூட்டு உளவியலைப் பாதிக்கும் என்பதோடு இவ்வாறான விடயங்கள் தமக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கும் செயல்களை நாடுவதை நோக்கி மாணவர்களைத் தள்ளிவிடும். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் மாணவர்கள் ஏற்பாடு செய்த நினைவு நிகழ்வானது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டதாரி மாணவர்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் அக்கறை கொண்டுள்ளனர் என்பதைக் குறிக்கிறது.

முரண்பாட்டு வலையங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் முக்கியமான நிர்வாக பதவிகளை

வகிப்பவர்கள், நினைவுகூரல் மற்றும் ஜனநாயக, அகிம்சை வழியிலான அரசியல் எதிர்ப்புடன் தொடர்புடைய மாணவர்களால் ஒழுங்கமைக்கப்படும் முக்கியமான நிகழ்வுகளை அந்த மாணவர்களை அந்நியப்படுத்தாமல் கவனமாக அணுக வேண்டும். தெற்கில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மாணவர்கள் நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறார்கள். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் செய்வது போல அங்கு அரசு கடுமையான முறையில் நடந்துகொள்வதில்லை. வடக்கு மாகாண சபை கூட கடந்த காலங்களில் போரின் இறுதிக் கட்டங்களில் இறந்தவர்களுக்காக நினைவு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது. போராட்டகாலங்களில் இறந்த விடுதலைப்புலி போராளிகளை நினைவுகூர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஆட்சியில் இராணுவத்தால் தாக்கப்பட்டனர். தற்போதைய சூழலில், மாணவர்களால் கட்டப்பட்ட நினைவுச் சின்னத்தை இல்லாமல் செய்யாமைக்காக பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவமானகரமான முறையில் பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். கல்விச் சுதந்திரத்தை வழங்குதல் மற்றும் இராணுவத் தலையீடு அற்ற வெளியை பல்கலைக்கழகத்தில் உருவாக்குதல் என்ற இரு விடயங்களிலும் பல்கலைக்கழக மானிய ஆணையகத்தின் இயலாமையானது, இதுவும் ஓர் இலங்கை அரசின் சிங்கள பெரும்பான்மை எந்திரங்களின் மற்றொரு கை என்பதைக் காட்டுகிறது. இராணுவம், அதன் புலனாய்வுத்துறை மற்றும் ஊடகங்களின் சில பிரிவுகளின் பேரினவாத அழுத்தங்களுக்கு இசைவதன் மூலம், பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் உயர் கல்வி அமைச்சு ஆகியவை வடக்கில் உள்ள ஒரே பொது பல்கலைக்கழகம் மற்றும் அந்த பல்கலைக்கழகம் சேவை செய்யும் சமூகங்களுக்கான தமது பொறுப்புகளில் இருந்து தவறியிருக்கின்றன.

1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வரையில் தேசியவாதம் மற்றும் தமிழ் போராளிகளின் சர்வாதிகார நடவடிக்கைகள் ஆகியவற்றை விமர்சிக்கும் கருத்துக்களை வெளிப்படுத்த பல்கலைக்கழகத்திற்குள் இடம் இருந்தபோதும், 1970களின் பிற்பகுதியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ் தேசியவாத நடவடிக்கைகளுக்கான ஓர் இடமாக இருந்து வருகிறது. பேராசிரியர் விக்னேஸ்வரனின் முன்னர் பதவியிலிருந்த பலரின் பதவிக்காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்குள் பல தமிழ் தேசியவாத அணிதிரட்டல்கள் மற்றும் நிகழ்வுகள் நடந்தன. கொல்லப்பட்ட தமிழ் போராளிகளுக்கான நினைவுச்சின்னம் பிரதான வளாகத்திற்குள் அவர்களில் ஒருவரின் பதவிக்காலத்திற்தான் கட்டப்பட்டது. அவர்கள் யாரும் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்படவில்லை. அவர்களிலிருந்து வித்தியாசமாக செயற்படாத விக்னேஸ்வரனை ஏன் குறிவைக்க வேண்டும்?

தமிழர்கள் மற்றும் பிற சமூகங்கள் மீது தமிழ் தேசியம் என்ற பெயரில் செய்யப்பட்ட வன்முறைகள் மற்றும் விலக்குகள் பற்றிய சுயமதிப்பீடு மற்றும் வெளிப்படையான உரையாடல்களுக்கான வெளி போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்குள் மீண்டும் ஏற்படுவதாகத் தென்படுகிறது. சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாட்சி என்பனவற்றிற்கான அர்த்தத்தை வடக்கில் வாழும் வேறுபட்ட இனங்கள், மதங்கள் மற்றும் கலாச்சாரக் குழுக்கள் எவ்வாறு கருதுகிறார்கள் மற்றும் பிராந்தியத்தில் சாதி, வர்க்கம் மற்றும் பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும் முரண்பாடுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகள் என்பனபற்றிய உரையாடல் வெளி தற்போது இருக்கிறது. இராணுவமயமாக்கல், போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பெரும்பான்மை அரசிலிருந்து வரும் பிற வகையான அடக்குமுறைகள் பற்றிய விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் கல்வி சமூகம் மற்றும் ஒட்டுமொத்த சமூகமும் பங்கேற்க, மற்றும் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கம் மற்றும் நியாயமான மற்றும் சமமான சமத்துவமான சகவாழ்வு பற்றிய விவாதங்களுக்கு சாதகமான பங்களிப்பை வழங்குவதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சர்வாதிகாரமில்லாத இடமாக இருக்க வேண்டும்.

1980 களின் பிற்பகுதியில் முரண்பாடுகளின் போது மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் அனைத்து தரப்பினராலும் கொல்லப்பட் டுக்கொண்டிருந்த போது, பல்கலைக்கழகங்கள் செயற்படுவதற்காக, பல்கலைக்கழக ஆணையத்தின் அப்போதைய தலைவரான பேராசிரியர் அர்ஜுன அளுவிகாரே பல்கலைக்கழகங்களின் மதிப்புகளினை உறுதிப்படுத்த வேண்டியிருந்த அதேநேரத்தில் யார் பயங்கரவாதி, யார் பயங்கரவாதி இல்லை என்ற பெயரிடலைத் தவிர்க்க வேண்டியிருந்தது. உயர்கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் இதைப் புரிந்து கொண்டார். நடந்துகொண்டிருந்த பயங்கரவாதத்தின் ஒவ்வொரு கட்சியும் வசதிக்கு ஏற்ப மாறிய அதன் சொந்த விவரிப்புகளைக் கொண்டிருந்தன.

எந்தவொரு நிலையான மதிப்புகளும் இல்லாமல் இத்தகைய நெருக்கடி நிறைந்த அரசியலில், இராணுவ புலனாய்வு அறிக்கைகளில் உள்ள உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுக ளை மட்டும் வைத்து உரிய செயன்முறையில்லாமல் பல்கலைக்கழக மானிய ஆணையம் எப்படித் தண்டிக்கலாம்? பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த காலங்களில் இராணுவம் அல்லது காவல்துறையினரால் தனிநபர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை, உண்மையற்றது அல்லது போதுமானதாக இனங்காணப்படவில்லை என்று என்று நீதிமன்றங்கள் நிராக ரித்திருந்தன. துணைவேந்தர் விக்னேஸ்வரனுக்கு ஒரு பக்கச்சார்பற்ற தீர்ப்பாயத்தின் முன் பதிலளிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இதுதான் நமது உயர் கல்வி முறையின் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தரமா?

நீதி என்பது பல்கலைக்கழக அமைப்பின் அத்திவாரமாக இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தீர்ப்பாயத்தால் (அது நிச்சயமாக இராணுவ புலனாய்வுப் பிரிவு அல்ல) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆதாரங்கள் இல்லாத நிலையில், எந்தவொரு ஊழியருக்கும் தண்டனை வழங்க பல்கலைக்கழக சட்டம் அனுமதிக்காது. நாட்டில் இன்று ஒரு பெரிய துருவமுனைப்பையும், நல்லறிவு திரும்புவதற்கான சிறிய நம்பிக்கையையும் நாம் காண்கிறோம். பல்கலைக்கழக மானிய ஆணையம் மற்றும் உயர்கல்வி அமைச்சு தற்போது செயற்பட்டு வரும் முறையானது நாடு தழுவிய பல்கலைக்கழகத் துறையின் கடுமையான நெருக்கடியைக் காட்டுகிறது. *

தமிழில் - குளோபல் தமிழ்ச் செய்திகள்






# அம்பாறையில் ஆயுதங்கள் மீட்பு!



அம்பாறை – பாலமுனைப் பகுதியில் இருந்து ரி – 56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கான மகசின் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸ்ஊடகப்பேச்சாளர்சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் வெடிபொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் சில பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனஅவர் கூறினார்.

தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே அவை கைப்பற்றப்பட்டன.

இந்த வெடிபொருள்கள் ஈஸ்டர் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியானசஹ்ரான்பயன்படுத்தியவையாக இருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

# நாமல் தம்பதியரை வாழ்த்தினார் மோடி

கொழும்பு, செப். 19

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் திருமணத்துக்கான வாழ்த்தைத் தெரிவித்து விசேட செய்தியொன்றைப் புதுடில்லியில் இருந்து அனுப்பியுள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

சிலமாதங்களுக்குமுன்னர்கொழும்பு வந்த இந்தியப்பிரதமர்மோடியிடம்தனது திருமண நிகழ்வை விவரித்த நாமல் ராஜபக்ஷ, அதற்கான அழைப்பிதழையும் பின்னர் அவருக்கு அனுப்பியிருந்தார்.

நேற்று முன்தினம் நடந்த நாமலின்திருமண வரவேற்பு நிகழ்வில்பிரதமர்மோடிகலந்து கொள்ள முன்னேற்பாடுகள் செய்யப்பட்டபோதும் நேற்று முன்தினம் அவரின் (மோடியின்) பிறந்ததினம்என்பதால்அவரின்நிகழ்ச்சி நிரலில் இலங்கை வருமளவுக்குப் போதிய நேரம் இருக்கவில்லையெனக் கூறப்பட்டது.

இந்தப்பின்னணியில் – விசேடவாழ்த்துச் செய்தியுடன் பரிசொன்றையும் அனுப்பி வைத்துள்ள இந்தியப் பிரதமர், நாமல் தம்பதியினரைப் பின்னர் இந்தியா வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

# வவுனியாவில் தண்ணுமைப் பிரவாகம்

வவுனியா, செப். 19

வவுனியாத் தமிழ்ச் சங்கமும் நல்லைக் கந்தன் குருசேத்திர மாணவர்களும் இணைந்து வழங்கும் தண்ணுமைப் பிரவாகம் – 2019 நிகழ்ச்சி, 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வவுனியா கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலைய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி. ல.அம்பிகைபாகன், வவுனியா நகரசபையின் செயலாளர் இ.தயாபரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரியின் ஓய்வுநிலை பீடாதிபதி கு.சிதம்பரநாதன்,வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.என்.ஜி. நாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வொழுங்கில், மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் போசுர் சிவஸ்ரீ.முத்து ஜெயந்திநாதக் குருக்களின் ஆசியுரை, வரவேற்புரை, தலைமையுரை,வர்ணம், பஞ்சரத்தினக் கீர்த்தனைகள், கீர்த்தனை, கௌரவ விருந்தினர் உரை, 'ராகம்,தாளம்,பல்லவி',சாஸ்திரிய மெல்லிசை, சிறப்பு விருந்தினர் உரை, தில்லானா,பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெறும். (ஐ)

# அங்கவீனமுற்ற படையினருக்கு எதிராக நீதிமன்று அதிரடி உத்தரவு

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி அலுவலகம் – பிரதமர் அலுவலகம் மற்றும் முக்கியமான அரச நிறுவனங்கள் முன்னிலையில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் அங்கவீனமுற்ற படையினர் ஈடுபடத் தடை விதிக்கும் இடைக்காலத் தடையொன்றைக் கோட்டை நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

கடந்த சில தினங்களாகக் கோட்டை ரயில் நிலையம் முன்பாக போராட்டம் நடத்திவரும் அங்கவீனமுற்ற படையினர் , நேற்றுமுன்தினம் நடத்திய எதிர்ப்பு ஊர்வலத்தால் இயல்பு நிலைமை பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கிங்ஸ்பெரி குண்டுதாரியின் சடலத்தை பொரளையில் அடக்கம் செய்ய பணிப்பு

கொழும்பு, செப். 19

கொழும்பு – கிங்ஸ்பெரி ஹோட்டலில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்திய மொஹமட் முபாரக்கின் உடற்பாகங்களை பொரளை மயானத்தில் அடக்கம் செய்யுமாறு கோட்டை நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு – கோட்டை நீதிவான் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

தற்கொலைக் குண்டுதாரி மொஹமட் முபாரக்கின் உடலை, அவரது உறவினர்கள் பொறுப்பேற்க மறுப்பு தெரிவித்துள்ள நிலையில் நீதவான் பொலிஸாருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் தினத்தன்று தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டபோது கிங்ஸ்பெரி ஐந்து நட்சத்திர ஹோட்டலும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மைத்திரியின் மகளின் ஹோட்டலுக்கு மதுபான அனுமதி வழங்கியவர் யார்?

## சபையில் வெடித்தது பெரும் சர்ச்சை

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகளின் ஹோட்டலுக்கு மதுபான விற்பனைக்கான அனுமதி எவ்வாறு கொடுக்கப்பட்டது, யாரால் கொடுக்கப்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான ஹேஷா விதானகே நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற புதிய மதுபானச்சாலைகளுக்கு வழங்கப்படும் அனுமதி தொடர்பான சபையில் ஏற்பட்ட சர்ச்சையின்போதே ஹேஷா விதானகே எம்.பி. இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

'போதைப்பொருள் ஒழிப்பில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார் என இவர்கள் கூறுகின்றனர். அப்படியானால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகளின் ஹோட்டலுக்கு மதுபான விற்பனைக்கான அனுமதி எவ்வாறு கொடுக்கப்பட்டது, யாரால் கொடுக்கப்பட்டது? போதைப்பொருள் ஒழிப்பில் முதலில் ஜனாதிபதி முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து எம் கட்சி மீது தேர்தலை இலக்காகக்கொண்டு சேறு பூச முற்படக்கூடாது, இவர்கள் மோசடிகளைச் செய்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவை அவமதிக்கும் வகையில் கருத்துக்களைக் கூறுவது தவறான விடயமாகும் – என்றார் அவர். (ஐ)

# இ.போ.ச. பகிஷ்கரிப்பு தொடர்கிறது வவுனியாவில் நேற்று ரயர்கள் எரிப்பு



இலங்கைப்போக்குவரத்துச்சபை ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்நேற்றுமூன்றாவது நாளாகவும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் தொடர் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதிகரிக்கப்பட்ட 2,500 ரூபா கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளல் உட்பட 5 கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாகப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் பருவ காலச் சீட்டுடன் வந்தும் நேரத்துக்குச் செல்ல முடியாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கினர்.

வவுனியா சாலை ஊழியர்கள் நேற்றுக் காலை சாலைக்கு முன்பாக ரயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமது சம்பளத்தை அதிகரி, ஒப்பந்த வேலையாட்களை நிரந்தரமாக்கு போன்ற பல்வேறு கோசங்களையும் அவர்கள் எழுப்பியிருந்தனர்.

போராட்ட இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியமையுடன், மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாதுஎனவும்தெரிவித்தார்.




# சரத் பொன்சேகாவுக்கு சமமான பதவி இன்று பெறும் 2 முன்னாள் தளபதிகள்



சிறிலங்காவின் முன்னாள் விமானப்படை மற்றும் கடற்படைத் தளபதிகளுக்கு உயர் கௌரவப் பதவி நிலைகளை அளிக்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இறுதிக்கட்டப் போர்க்காலத்தில் இலங்கைக் கடற்படைத் தளபதியாகப் பணியாற்றிய அட்மிரல் வசந்த கரன்னகொட, 'அட்மிரல் ஒவ் த பிளீட்' ஆகவும், விமானப்படைத் தளபதியாக பணியாற்றிய எயர் சீவ் மார்ஷல் றொஷான் குணதிலக, 'மார்ஷல் ஒவ் த எயர்போர்ஸ்' ஆகவும் உயர் கௌரவ பதவிநிலைகளுக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்ட 'பீல்ட் மார்ஷல்' பதவிக்கு இணையான பதவி நிலைகளாக இவை உள்ளன.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்த உயர் கௌரவப் பதவி நிலைகளை அளிக்கும் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு முன்னாள் படைத் தளபதிகளுக்கும் உயர் பதவி நிலைகளை வழங்குவார். (ஐ)

# அரச பஸ் சேவைகள் முடங்கியமையால் முல்லைத்தீவு மக்கள் பெரும் சிரமத்தில்

முல்லைத்தீவு, செப். 19

அரசபஸ்களின் போக்குவரத்துச் சேவை முடங்கியுள்ளதால், முல்லைத்தீவில் மக்கள் பெரும் சிரமத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

குறிப்பாக இ.போ.ச பஸ்களின் சேவைகள் முடங்கியுள்ளமையால், தனியார் பஸ்களுக்குத் தாம் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும், தனியார் பஸ்களின் சேவைகள் சில பகுதிகளுக்கு இன்மையால் நீண்ட தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், ஓட் டோக்களுக்கு அதிக பணம் செலுத்திச் செல்லவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாக வும், தனியார் பஸ்களில் சன நெரிசல் மத்தியில் செல்லவேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



அத்தோடு நீண்ட தூரங்களில் இருந்து பாடசாலைகளுக்கு வருகின்ற மாணவர்களும், அரச பஸ்களின் சேவைகள் இன்மையினால் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பூஜித் ஜயசுந்தரவின் மனு நவம்பரில் விசாரணைக்கு

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு நவம்பர் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

பதவியிலிருந்து தம்மைக் கட்டாய விடுமுறையில் அனுப்பியமையை சவாலுக்கு உட்படுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு, நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன ஜெயவர்தன தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வின் முன் விசாரணைக்கு வந்தது.

இதன்போது ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் செப்ரெம்பர் 25,26 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமையால், அவரது மனுவை இந்த விசாரணைகளின் பின்னர் எடுத்துக்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, இந்த வழக்கை நவம்பர் 13 ஆம் திகதி விசாரிக்க உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு உத்தரவிட்டது. இதேவேளை இந்த மனு தொடர்பாக பதிலளித்த ஜனாதிபதியின் செயலாளர், பிரமாணப் பத்திரம் மூலம் இந்த மனுவுக்கு எதிராக ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து கடந்த மாதம் 09ஆம் திகதியே புலனாய்வுத்துறையினருக்கு தகவல்கள் கிடைத்தும் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்திராதமையின் காரணமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரைப் பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் உத்தரவையடுத்து ஹேமசிறி பெர்னாண்டோ பதவி விலகியிருந்தார். ஆனாலும், பூஜித் ஜயசுந்தர பதவி விலகாதமையால் அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தார். இதனை ஆட்சேபித்தே அடிப்படை உரிமை மீறல் மனுவை அவர் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சீன வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்குத் திடீர் வருகை

## அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவார்

கொழும்பு, செப். 19

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி இலங்கைக்குத் திடீர் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு அனைத்துலக கொள்கலன் முனைய திட்டம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் உள்ளிட்ட சீனாவினால் மேற்கொள்ளப்படும், திட்டங்களை ஆய்வு செய்யவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி நேற்றுக் காலை 9 மணியளவில் தாமரைக் கோபுரத்தைப் பார்வையிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், தாமரைக் கோபுர திறப்பு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தாமரைக் கோபுரக் கட்டுமானப் பணிக்காக இலங்கை அரசால் சீன நிறுவனம் ஒன்றுக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்ட 200 கோடி ரூபா காணாமல் போயிருப்பதாகக் குற்றம்சாட்டியிருந்தார்.

இதையடுத்து, தாமரை கோபுரத்தைப் பார்வையிடும் திட்டத்தை சீன வெளிவிவகார அமைச்சர் கைவிட்டுள்ளார். அவர் இங்கு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.



சீன வெளிவிவகார அமைச்சரின் இந்தத் திடீர் பயணம் தொடர்பக உள்ளூர் ஊடகவியலாளர் களுக்குத் தகவல் வெளியிடப்படவில்லை.

அதேவேளை சீன ஊடகவியலாளர்கள் சிலர் சீன வெளிவிவகார அமைச்சரின் பயணம் குறித்த செய்தி சேகரிப்புக்காக வந்துள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.


அதேவேளை, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் செயலருமான சென் மின்' னர் தலைமையிலான 17 பேர் கொண்ட சீன உயர்மட்டக் குழுவும் நேற்றுமுன் தினம் மாலை கொழும்பு வந்தது. (ஐ)

# பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்தி; இந்தியாவுடன் உடன்பாட்டுக்கு அனுமதி

கொழும்பு, செப். 19

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக, இலங்கை அரசு, இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடவுள்ளது.

இந்த புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு, அமைச்சரவை நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளது.



பலாலி விமானநிலையத்தை அபிவிருத்திசெய்வதற்கான செலவுகளில் ஒரு பகுதியை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இது தொடர்பாக, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலர், இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திடவுள்ளார்.

இதற்கு இலங்கை அமைச்சரவையின் அனுமதியைக் கோரும் பத்திரத்தை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க சமர்ப்பித்திருந்தார். அதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. (ஐ)

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park
0777570124
0773366443
0766999597
0717772377
0215675566
0212229581
0212222050
0212220388



# வடக்கைச் சேர்ந்த 03 வீரர்களுக்கு 19 வயது தேசிய அணியில் வாய்ப்பு

தெற்காசிய உதைபந்தாட்ட கூட்டமைப்பின் 19 வயதிற்குட்பட்ட தொடருக்கான இலங்கை அணியில் வடக்கைச் சேர்ந்த 03 வீரர்கள் இடம் பெற்றுள்ளனர் என அறிய முடிகிறது.

19 வயதிற்குட்பட்ட சாவ் கிண்ண தொடருக்காக இலங்கை ஜுனியர் உதைபந்தாட்ட அணி நேபாளம் செல்லவுள்ளது.

இந்த அணியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வீரர்களான பாக்கியநாதர் றெக்சன் , மரியநேசன் பிரசாந்த் மற்றும் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய அணி வீரர் தேனுஜன் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். (ஐ)

# ஸ்கொட்லாந்து அணியை வீழ்த்தியது அயர்லாந்து!

அயர்லாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் நெதர் லாந்து அணிகள் மோதும் ரி - 20 தொடர், தற் போது அயர்லாந்தில் விறுவிறுப்பாக நடை பெற்று வருகின்றது.

ரி - 20 உலகக்கிண்ண தகுதி சுற்றுப் போட்டி களுக்கான முன்னோட்ட தொடராக இத்தொடர் நடைபெறுகின்றது.



இந்த முத்தரப்பு ரி - 20 தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற மூன்றாவது லீக் போட்டியில், ஸ்கொட்லாந்து அணியும், அயர்லாந்து அணி யும் பலப்பரீட்சை நடத்தின.

டப்ளின் மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கொட்லாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 193 ஓட்டங்களை பெற் றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக கெல்யும் மெக்லியோட் 72 ஓட்டங்களையும், ஜோர்ஜ் முன்சே 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

அயர்லாந்து அணியின் பந்துவீச்சில், போய்ட் ரேன்கின் 3 விக்கெட்டுகளையும், கரேத் டிலேன்னி 2 விக்கெட்டுகளையும், ஸ்டுவர்ட் தொம்சன் மற்றும் டேவிட் டிலேன்னி ஆகியோர் தலா 1 விக் கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 194 என்ற வெற்றி இலக்கைநோக்கிபதிலுக்குகளமிறங்கியஅயர்லாந்து அணி, 17.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அயர்லாந்து அணி 4 விக்கெட்டுகளால் வெற் றியை பதிவு செய்தது.


இதன்போது, அணியின் அதி கபட்ச ஓட்டங்களாக ஹென்ரிவ் பல்பரைன் 64 ஓட்டங்களையும், கரேத் டிலேன்னி 52 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர்.

ஸ்கொட்லாந்து அணி யின் பந்துவீச்சில் மார்க் வோட் 3 விக்கெட்டுகளையும், அலஸ்டயார் எவண்ஸ், ஹம்சா தாஹீர் மற்றும் ரிச்சி பெரிங்டன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இந்த முத்தரப்பு தொடரில் அயர்லாந்து அணி, 6 புள்ளிக ளுடன் புள்ளிபட்டி யலில் முத லிடத்தில் உள்ளது.

மேலும், ஸ்கொட்லாந்து அணி 4 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், நெதர்லாந்து அணி 1 புள்ளியுடன் இறுதி இடத்திலும் உள்ளது.

# டோனி ஓய்வு குறித்து யார் முடிவெடுப்பது?



டோனியின் ஓய்வு குறித்து தேர்வுக் குழுவினரும், விராட் கோஹ்லியும் தான் முடிவெடுக்க வேண்டும் என இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சவுரவ் கங்குலி கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி வீரர் டோனி தன்னுடைய எதிர்கால திட்டம் குறித்து இதுவரை வாய் திறக்கவில்லை.

இந்நிலையில் அடிக்கடி அவர் ஓய்வு பெறும் விடயம் தொடர்பாக வதந்தி பரவி வருகிறது.

இது குறித்து பேசிய சவுரவ் கங்குலி, டோனியின் எதிர்காலம் குறித்து விராட் கோஹ்லியும், தேர்வுக் குழுவினரும் முடிவு செய்யவேண்டும். தேர்வுக் குழுவி னரும், கோஹ்லியும் என்னநினைக்கிறார் கள் என்று எனக்கு தெரியவில்லை. அவர் கள் தான் முக்கியமானவர்கள்.

எனவே, அவர்கள் தான் முடிவெடுக்க வேண்டும். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ரி20 மற்றும் டெஸ்ட் போட்டி களைஇந்தியாவெல்லும்எனநம்புகிறேன்.

இந்தியா பிடித்தமான அணி, இதோடு சொந்த மண்ணில் இந்தியா ஓர் ஆபத் தான அணியும் கூட. பல ஆண்டுகளாக அவர்களை வெல்வது மிகவும் கடின மாக உள்ளது - என்றார்.

# சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த குயிண்டன் டி கொக்!



தென்னாபிரிக்க ரி - 20 கிரிக்கெட் அணியின் தலைவர் குயிண்டன் டி கொக் கூறிய சர்ச்சையான கருத்துக்கு தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரில், தென்னாபிரிக்க அணி முதல் சுற்றுடனேயே வெளியேறியது.

இதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் வென்றதே எனது வாழ்வில் மறக்க முடியாத தருணம் என குயிண்டன் டி கொக் கூறினார். இந்த விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

அத்தோடு, அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான கார்கிஸோ ரபாடா, சோர்விழந்து காணப் பட்டதற்கும் ஐ.பி.எல். தொடரே முக்கிய காரணம் என வும் அணியின் அப்போதைய தலைவர் டு பிளெஸிஸ் குற்றஞ்சாட்டினார்.

இந்த நிலையில், தற்போது இந்தியாவிற்கு கிரிக் கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னா பிரிக்கா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரிலும், மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளையாடவுள்ளது.

இதே தொடரின் இறுதி தொடரான மூன்று போட்டி கள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் மீண்டும் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இதற்கிடையில், முதலாவதாக நடைபெறும் ரி -20 தொடரிற்கு முன்னதாக ஊடகவியலாளர் சந்திப் பொன்று இடம்பெற்றுது.

இதன்போது, குயிண்டன் டி கொக்கிடம், 'உலகக் கிண்ண தொடரை விட ஐ.பி.எல். தொடர் தான் உணர்ச்சி ரீதியிலான மிகப்பெரிய தொடர்' எனக் கூறியது ஏன் எனக் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு குயிண்டன் டி கொக் பதிலளிக்கையில், "நான் என்ன சொல்ல வேண்டும்? நான் இதுவரை வெற்றி பெற்றதில் மிகப்பெரிய விடயம். நான் உலகக் கிண்ணத்தை இதுவரை வென்றது கிடையாது. ஆகவே, ஒருமுறை நான் உலகக் கிண்ணத்தை வென்றால், எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நான் செய்ததை விட, அது மிகப்பெரியதாக இருக்கும்.

"நான் ஒன்றிரண்டு அணிகளுக்கான ஐ.பி.எல். தொடரில் விளையாடிள்ளேன். அந்த அணிகள் பிளே – ஒப்ஸ் சுற்றுக்கு முன்னேறியதில்லை. நான் மும்பை அணிக்காக விளையாடினேன். அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறி சம்பியன் பட்டத்தை வென்றது.

ஆகவே எந்தவொரு கிரிக்கெட்டருக்கும் இது மிகப் பெரிய சாதனையாகத்தான் இருக்கும். தற்போது கிரிக் கெட் வீரர்கள் ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் விளை யாட வேண்டும். உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடும் அணியில் ஒரு வீரராக இருக்க வேண் டும் என்று விரும்புவார்கள்.

"தனிப்பட்ட முறையில் இது ஒவ்வொருவருக்கும் மாறுபட்டதாக இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு கருத்து இருக்கும். என்னுடைய கருத்து என்னு டையது. அவர்களுடைய கருத்து அவர்களுடையது. ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றது இதுவரை என்னு டைய மிகப்பெரிய சாதனை" – என கூறினார்.

காலைக்கதிர்
Kalaikathir



# இந்திய - பாகிஸ்தான் பதற்றம் குறைகிறது என்கின்றார் டிரம்ப்

வொஷிங்டன்,செப்.19

'இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் குறைந்து வருகிறது' என அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 370ஐ மத்திய அரசு கடந்த மாதம் 5 ஆம் திகதி அதிரடியாக ரத்துச் செய்தது.

அத்துடன் அந்த மாநிலத்தை 2 யூனியன் பிரதேசங்களாக்கி தனது நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.



இது பாகிஸ்தானுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரத்தை சர்வதேச நாடுகளிடம் எடுத்துச்செல்வதில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தீவிரமாக இருக்கிறார். இதனால் இந்தியா, பாகிஸ்தான் இடையேயான உறவில் பதற்றம் நிலவி வந்தது.

இந்த நிலையில் நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபை கூட்டம் நடக்க இருக்கிறது. இதில் கலந்துகொள்வதற்கு பிரதமர் மோடி வரும் 22 ஆம் திகதி தொடங்கி 27 ஆம் திகதி வரை அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

22 ஆம் திகதி ஹுஸ்டன் நகரில் 'மோடி நலமா?' என்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு ஆகியுள்ளது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க வாழ் இந்தியர்கள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடியுடன் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும் பங்கேற்கிறார்.

இதை கடந்த திங்களன்று வொஷிங்டன் வெள்ளை மாளிகையில் நிருபர்களிடம் பேசிய டிரம்ப் உறுதி செய்தார்.

அப்போது அவர், பிரதமர் மோடியை சந்திக்கிறேன். பாகிஸ்தான் பிரதமரையும் சந்தித்து பேசுகிறேன் என குறிப்பிட்டார். ஆனால் பாகிஸ்தான் பிரதமரை சந்திப்பது எப்போது என்பது பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

இருப்பினும் நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தின்போது இம்ரான்கானை டிரம்ப் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

காஷ்மீரைப் பற்றியோ, காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவை நீக்கிய பின்னர் இந்தியா, பாகிஸ்தான் இடையே நிலவிய பதற்றம் பற்றியோ குறிப்பிடாத டிரம்ப், அங்கு பதற்றம் குறைவதில் நிறைய முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது என்று மட்டும் சொன்னார்.

கடந்த மாதம் பிரான்ஸ் சென்றிருந்தபோது டிரம்பை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். அப்போது அவர் டிரம்பிடம், இந்தியா, பாகிஸ்தான் இடையேயான அனைத்து பிரச்சினைகளும் இயல்பாகவே இரு தரப்பு பிரச்சினைகள்தான், இதில் மூன்றாவது நாட்டை நாங்கள் கஷ்டப்படுத்த விரும்பவில்லை, நாங்கள் இரு தரப்புமே விவாதித்து, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வோம் என உறுதிபட தெரிவித்திருந்தமை நினைவுகூரத்தக்கது.

## காஷ்மீர் மீது இந்திய ஆக்கிரமிப்பை அறிய சர்வதேசக்கும் பாக். அழைப்பு

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் மீது இந்தியாவின் ஆக்கிரமிப்பு தோறணையை அறிந்து கொள்ள சர்வதேச நாடுகளுக்குப் பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

ஒகஸ்ட் 5 ஆம் திகதி ஜம்மு – காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை இந்தியா ரத்துச் செய்த பின்னர் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்து வருகிறது.

காஷ்மீர் மீதான இந்தியாவின் நடவடிக்கைக்குப் பதிலளித்த பாகிஸ்தான் இந்தியாவுடனான ராஜதந்திர உறவுகளை முறித்து பாகிஸ்தானில் இருந்து இந்தியத் தூதரை வெளியேற்றியது.

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேசமயமாக்க பாகிஸ்தான் தொடர்ந்து முயற்சித்து வருகிறது, ஆனால் 370 ஆவது சட்டப் பிரிவை ரத்துச் செய்தமை தனது உள்நாட்டு வியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் சமீபத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் 'பாகிஸ்தானினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஷ்மீர் தொடர்பில் எங்கள் நிலைப்பாடு, எப்போதும் தெளிவாக இருக்கும், அது இந்தியாவின் ஒரு பகுதியாகும், ஒரு நாள் அதன் மீது எங்கள் அதிகார வரம்பு இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்' – எனக் கூறினார்.

ஜெய்சங்கரின் அறிக்கைக்குப் பதிலளித்த பாகிஸ்தான், பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதிகள் மீது இந்தியாவின் ஆக்கிரமிப்பு தோறணையை அறிந்து கொள்ள சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்தியாவில் இருந்து இதுபோன்ற பொறுப்பற்ற மற்றும் போர்க்குணமிக்க அறிக்கைகள் வருகின்றமை பதற்றங்களை மேலும் அதிகரிக்கச் செய்வதோடு பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பைக் கடுமையாக பாதிக்கும் அபாயத்தையும் கொண்டுள்ளமை என்று பாகிஸ்தானின் வெளியுறவு அலுவலகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் வெளியுறவுத்துறை வெளியிட்டு உள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:–

பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் கூறிய பொறுப்பற்ற கருத்துக்களை நாங்கள் கடுமையாகக் கண்டிக்கிறோம், நிராகரிக்கிறோம். இந்த கருத்துக்கள் காஷ்மீரில் அதன் மோசமான மனித உரிமை மீறல்களை சர்வதேச அளவில் தணிக்கை செய்வதில் இந்தியாவின் முழு விரக்தியின் வெளிப்படையான வெளிப்பாடாகும்.

காஷ்மீரின் அப்பாவி மக்களுக்கு எதிரான குற்றங்களிலிருந்து இந்தியா சர்வதேச கவனத்தை திசை திருப்ப முடியாது. பாகிஸ்தான் சமாதானத்தை விரும்புகிறது. ஆனால் எந்தவொரு ஆக்கிரமிப்புச் செயலுக்கும் திறம்பட பதிலளிக்கவும் தயாராக இருக்கிறது.

நாட்டு வெறித்தனமான சொல்லாட்சியை நாடுவதற்குப் பதிலாக, இந்தியா தனது சட்டவிரோத நடவடிக்கைகளைத் திரும்பப் பெற வேண்டும். ஜம்மு – காஷ்மீரில் கடுமையான மனித உரிமை மீறல்களை உடனடியாக நிறுத்த வேண்டும். சர்வதேச சட்டத்தை மீறுவதைத் தவிர்க்க வேண்டும், ஜம்மு – காஷ்மீர் தகராறின் இறுதித் தீர்வுக்கான ஐ.நா. பாதுகாப்பு தீர்மானங்களை முழுமையாக பின்பற்ற வேண்டும். – எனக் கூறப்பட்டுள்ளது.

## விக்ரம் லாண்டரை கூகுளில் அதிகம் தேடிய பாக். மக்கள்

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பி வைத்த விக்ரம் லாண்டர் கடைசி நேரத்தில் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்பை இழந்தது. இதனால் மிகுந்த ஏமாற்றமடைந்த இஸ்ரோ விஞ்ஞானிகள் விக்ரம் லாண்டரைத் தொடர்பு கொள்வதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 7 ஆம் திகதி கூகுளில் 'சந்திரயான் 2', 'இஸ்ரோ', 'விக்ரம் லாண்டர்' உள்ளிட்ட வார்த்தைகள் அதிகம் தேடப்பட்டுள்ளன என 'கூகுள் டிரெண்ட்ஸ்' தரவுகள் தெரிவிக்கின்றன.

அதில், இந்தியர்களைப் போல பாகிஸ்தான் மக்களும் 'சந்திரயான் 2', 'இஸ்ரோ', 'விக்ரம் லாண்டர்' உள்ளிட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தி கூகுளில் அதிகம் தேடியுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் விக்ரம் லாண்டரைப் பற்றி அறிந்து கொள்வதில் இந்தியர்களை விட பாகிஸ்தானியர்களே அதிகம் ஆர்வம் காட்டியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக விக்ரம் லஆண்டர் தொடர்பை இழந்தமையும் இந்தியா பெயில்ஸ் (இந்தியா தோற்றுவிட்டது) என்ற ஹேஸ்டேக் மூலம் டுவிட்டரில் இந்தியாவை பாகிஸ்தானியர்கள் கேலி செய்தனர்.

அதற்கு பதிலடியாக 'வொர்த்லெஸ் பாகிஸ்தான் (பயனற்ற பாகிஸ்தான்) என்ற ஹேஸ்டேக்கை இந்தியர்கள் உலக அளவில் டிரெண்ட் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## 2 நாள்களுக்கு கன மழை

சென்னை, செப். 19

தமிழகம் உள்ளிட்ட 4 மாநிலங்களில் 2 நாள்களுக்கு கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வெப்பசலனம் காரணமாக பரவலாக மழை பெய்து வரும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு:–

மத்தியமேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள ஆந்திரக் கடல் பகுதிகளில் மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இது அடுத்த 12 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாற வாய்ப்பு உள்ளது.

இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரி, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அடுத்த 2 நாள்களுக்கு கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

## திகார் சிறையில் சிதம்பரத்துடன் காங்கிரஸ் தலைவர்கள் சந்திப்பு



திகார் சிறையில் உள்ள முன்னாள் இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தை காங்கிரஸ் மூத்த தலைவர்கள் நேற்று சிறைக்குச் சந்தித்து பேசினர்.

ஐ.என்.எக்ஸ் மீடியா வழக்கில் ப. சிதம்பரம் கைது செய்யப்பட்டு கடந்த செப்டம்பர் 5 முதல் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்கள் குலாம் நபி ஆசாத், அகமது படேல் ஆகியோர் நேற்றுக் காலை திகார் சிறையில் முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம் பரத்தைச் சந்தித்தனர். அவர்களுடன் சிதம்பரத்தின் மகனும், காங்கிரஸ் எம்.பி.யுமான கார்த்தி சிதம்பரமும் சென்று இருந்தார். சிதம்பரத்திடம் காஷ்மீர் உள்ளிட்ட தற்போதைய அரசியல் நிலைமை, வரவிருக்கும் தேர்தல்கள் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து தலைவர்கள் அரை மணி நேர சந்திப்பின் போது விவாதித்தனர் என்று கூறப்படுகிறது.

# தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு டிரம்பின் பூர்வாங்கத் தெரிவில் ஐந்து பேர்



வொஷிங்டன்,செப்.19

அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு 5 பேர் கொண்ட பட்டியலை இப்போதைக்குத் தேர்வு செய்திருக்கின்றார் அமெரிக்க அதிபர் டிரம்ப் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்து வந்த ஜோன் போல்டன் கடந்த 11 ஆம் திகதி அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதுபற்றி அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறும்போது, தனது பல ஆலோசனைகளுக்கு போல்டன் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தமையுடன், அரசு நிர்வாகத்துடன் அவரது செயற்பாடுகள் ஒத்துப் போகவில்லை என்று குற்றச்சாட்டாக குறிப்பிட்டார்.

இதனிடையே, அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு 5 பேர் கொண்ட பட்டியலை அதிபர் டிரம்ப் இறுதி செய்துள்ளார். ரொபர்ட் ஓ பிரையன், ரிக் வாடெல், லிசா கார்டன் ஹேகர்டி, பிரெட் பிளீட்ஜ் மற்றும் கெய்த் கெல்லாக் ஆகிய 5 பேர் கொண்ட பட்டியலை அதிபர் டிரம்ப் தேர்வு செய்துள்ளார் என்று தெரிவித்துள்ள வெள்ளை மாளிகை இது முழுமையான பட்டியல் இல்லை என்றும் தெரிவித்துள்ளது

# அமெரிக்காவில் ஏழை மக்களின் பசி தீர்க்கும் இலவச ஹோட்டல்

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள பிரெவட்டன் நகரில் பிரட்டீ மெக் மில்லன் – லிசா தோமஸ் மெக்மில்லன் என்ற தம்பதி நடத்தி வரும் ஹோட்டல் பசியால் வாடும் ஏழை, எளிய மக்களுக்கு இலவச மதிய உணவை வழங்கி வருகிறது.

பணி ஓய்வு பெற்ற இந்த தம்பதி தங்களின் ஓய்வூதியப் பணத்தைக் கொண்டு சேவை நோக்கத்துடன் இந்த ஹோட்டலை நடத்தி வருகின்றனர். இந்த ஹோட்டலில் விலைப்பட்டியல் கிடையாது.




உணவு சாப்பிடும் நபர் தாங்கள் கொடுக்க விரும்பும் பணத்தை ஹோட்டலில் இருக்கும் நன்கொடைப் பெட்டியில் போடலாம். அதிலும் அதிகபட்சமாக 5 டொலருக்கு மேல் நன்கொடை பெட்டியில் போடக்கூடாது என்பது மெக் மில்லன் தம்பதியின் கனிவான வேண்டுகோள்.

இதனால் சிலர் பண்டமாற்று முறையில் தாங்கள் சாப்பிடும் உணவுக்காக தங்கள் வீட்டில் விளைவிக்கப்படும் காய்கறி உள்ளிட்ட பொருள்களை வழங்கி வருகின்றனர். மேலும் சிலர் ஹோட்டலில் உணவு பரிமாறுவது உள்ளிட்ட தங்களால் முடிந்த வேலை செய்து கொடுக்கின்றனர்.

தினந்தோறும் 100 இற்கும் மேற்பட்டோர் வரிசையில் காத்திருந்து சாப்பிட்டு செல்கின்றனர். அதிகமாக நன்கொடை பெறுவதை தவிர்த்தாலும் சிலர் தபால் மூலம் காசோலையில் நன்கொடை அனுப்பிவருகின்றனர் எனவும், அதில் அதிகபட்சமாக ஒரு முறை 1,000 டொலர் (இலங்கை மதிப்பில் ரூபா ஒரு லட்சத்து 75 ஆயிரம்) கிடைத்துள்ளனது எனவும் மெக்மில்லன் தம்பதி கூறுகின்றனர்.

இதுபற்றி அவர்கள் மேலும் கூறுகையில் –

இதற்கு முன், கல்லூரியில் ஏழை மாணவர்களுக்காக இலவச ஹோட்டல் நடத்தி வந்தோம். முதியவர்களும் பயன்பெறும் வகையில் இந்த ஹோட்டல் தொடங்கி நடத்தி வருகிறோம். ஏழைகளுக்கு உணவளிப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. நாங்கள் தேவைக்கு உணவளிக்கிறோம். இதுவே எங்கள் குறிக்கோள். – என்றனர்.



# வலையில் சிக்கிய விநோத மீன்

ஒஸ்லோ,செப்.19

வேற்றுக் கிரகவாசி போன்ற தோற்றத்தில் ('ஏலியன்' போன்ற உருவ அமைப்புடன்) வலையில் சிக்கிய மீன் குறித்துச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நோர்வே நாட்டில் நோர்டிக் சீ ஆங்கிளிங் என்ற மீன்பிடி நிறுவனத்தில் வழிகாட்டியாக பணிபுரிந்து வருபவர் ஆஸ்கார் லுண்டால் (வயது 19). அந்நாட்டின் கடலோர பகுதியில் அந்தோயா தீவு அருகே புளூ ஹேலிபட் என்ற அரிய வகை உயிரினத்தைத் தேடி கடலுக்குள் சென்றுள்ளார்.

அவரது வலையில் ஏதோ ஒரு பெரிய மீன் சிக்கியுள்ளது என உணர்ந்துள்ளார். தொடர்ந்து அதனை கடல்நீரில் இருந்து வெளியே எடுப்பதற்கு அவருக்கு அரை மணிநேரம் ஆகியுள்ளது. வலையை வெளியே எடுத்து அதில் சிக்கிய மீனை காண சென்றவர் அதிர்ச்சியில் துள்ளிக் குதித்து விட்டார்.

அவரிடம் சிக்கிய மீன் மிக பெரிய கண்களுடன் காண்பதற்கு 'ஏலியன்' போன்ற உருவத்துடன் அச்சுறுத்தும் வகையில் இருந்துள்ளது. அதன் கண்கள் பெரிய அளவில் இருந்தன. வாய் அமைப்பும் வேறுபட்டு இருந்தது. இருளிலும் காண்பதற்கு வசதியாக இவ்வளவு பெரிய கண் அவற்றுக்கு உள்ளது என நம்பப்படுகிறது.

சுறா வகையுடன் சேர்ந்த இந்த மீன் ரேட்பிஷ் மீன் ஆகும். கடலின் ஆழத்தில் வசிக்க கூடிய இவ்வகை மீன்கள் வலையில் அதிகம் சிக்குவதில்லை.

# அமெரிக்காவுடன் இனிமேல் பேச்சுக்கு வாய்ப்பே இல்லை என்று ஈரான் உறுதி!



சவூதி அரேபியாவின் எண்ணெய் ஆலை மீது ஈரான்தான் தாக்குதல் நடத்தியது எனக்கூறி அதற்கு ஆதாரமாக செயற்கைகோள் படம் ஒன்றையும் அமெரிக்கா வெளியிட்டது. மேலும் இந்த தாக்குதலுக்கு எதிர்வினையாற்ற அமெரிக்க இராணுவம் தயாராக இருக்கின்றது என டிரம்ப் குறிப்பிட்டார்.

எனினும், அமெரிக்கா தங்கள் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை எனக் கூறிய ஈரான், இதுபோன்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்தால் போரைச் சந்திக்க வேண்டிய தேவை ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில், இனி எந்த நிலையிலும் அமெரிக்காவுடன் பேச்சுக் கிடையாது என ஈரான் தலைவர் அயத்துல்லா அலி காமெனி திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்–

அமெரிக்காவுடன் பேச்சு நடத்தும் எந்த திட்டமும் எங்களிடம் இல்லை. சவூதி அரேபிய எண்ணெய் ஆலைத் தாக்குதல் சம்பவத்தைப் பயன்படுத்தி ஈரானுக்கு அழுத்தம் கொடுக்க அமெரிக்கா திட்டமிடுகிறது. ஆனால் நாங்கள் அதற்குப் பலியாக மாட்டோம். அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவதில் எந்த பயனும் இல்லை. இனி அவர்களுடன் எந்த நிலையிலும் பேச்சு இல்லை.– எனக் கூறினார்

# பிலிப்பீன்ஸில் லொறி கவிழ்ந்து 20 பேர் சாவு; 14 பேர் படுகாயம்



பிலிப்பீன்ஸில் குறுகலான மலை இடுக்கில் லொறி கவிழ்ந்ததில் 20 பேர் பலியாகியுள்ளனர்.

பிலிப்பீன்ஸ் நாட்டின் தெற்கே போலி நகர் அருகே கடற்கரைப் பகுதியில் விருந்து நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு விட்டு சிலர் தங்களது சொந்த ஊருக்கு லொறி ஒன்றில் திரும்பிக் கொண்டிருந்தனர். திடீரென அந்த லொறி குறுகலான மலை இடுக்கில் கவிழ்ந்தது.




இந்த விபத்தில் ஒன்று முதல் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உள்பட 15 பேர் பலியாகினர். தொடர்ந்து 19 பேர் காயத்திற்கு மருத்துவ சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர்களில் 5 பேர் பின்னர் உயிரிழந்தனர்.

லொறியின் பிரேக்குகள் சரியாக வேலை செய்யாததே விபத்திற்குக் காரணம் என அதனை நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர். விபத்திற்கான சரியான காரணம் பற்றி விசாரணை நடத்தப்படும் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

போதிய பராமரிப்புகள் இல்லாத பஸ்கள் மற்றும் முறையான பயிற்சி இல்லாத சாரதிகளால் அந்நாட்டில் சாலை விபத்துகள் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன.

## அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டி – 2019

### தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம்





2019 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டியில் தனியிசை – பிரிவு 04 இல் கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி வாசுகி சுவாமிநாதன் சர்மாவும் இலக்கிய விமர்சனம் – பிரிவு 05 இல் கொ/ றோயல் கல்லூரியை சேர்ந்த செல்வன். சு. அனந்த நாராயணன் சர்மாவும் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ்/வட்டுக்கோட்டை – கொ/ பம்பலப்பிட்டியை சேர்ந்த பிரபல பட்டயக் கணக்காளரும் பிரபல மிருதங்க வித்துவானுமாகிய பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா தம்பதியினரின் புதல்வன், புதல்வியும் ஆவார்.

செல்வி வாசுகி சுவாமிநாதன் சர்மா சென்ற ஆண்டு 2018 இல் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப்போட்டியில் தனி இசை – பிரிவு 05 இல் முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளமையும், சு. அனந்த நாராயணன் சர்மா அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் பாவோதல் – பிரிவு 03 இலும் முதலாம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை வென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று கடற்கரை சுத்தம் செய்யும் நிகழ்வு





முல்லைத்தீவு, செப். 19

சர்வதேச கடற்கரை சுத்தப்படுத்தல் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாக்கும் வாரம் கடந்த 16ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று கடற்கரை துப்பரவு செய்யும் நடவடிக்கைகள் மாவட்ட செயலாளர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, முல்லைத்தீவு மாவட்ட செயலகம், கரையோரம் பேணல் திணைக்களம், சமுர்த்தித் திணைக்களம் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள், கிராம மக்கள் எனப் பலரும் பங்கேற்று சுத்தம் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# தெரிவுக் குழுவின் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, செப். 19

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் விசேட தெரிவுக்குழுவின் கால எல்லையை நீடிக்கும் யோசனை நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதன்போதே அதன் கால எல்லையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி வரை நீடிப்பதற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு முன்னர் அந்தத் தெரிவுக்குழுவின் கால எல்லையை எதிர்வரும் 30ஆம் திகதி வரை நீடிப்பதற்குக் கடந்த ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றம் அனுமதி வழங்கிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதல்கள் காரணமாக 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையுடன் பலர் காயமடைந்தனர்.

இதனையடுத்து தாக்குதல்கள் குறித்து ஆராயப் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

இந்தக்குழுவில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் இராணுவத்தளபதி உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்டோர் இதுவரையில் சாட்சியம் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சாட்டி கடற்கரைக்கு ஆளுநர் கண்காணிப்பு





ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சாட்டி கடற்கரைக்கு நேற்றுக் காலை கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். பொதுமக்கள் அதிகளவில் வருகை தரும் சுற்றுலாப்பகுதியான சாட்டி கடற்கரையை சுத்தமாக பேணுமாறும் இப்பகுதியில் காணப்படும் பொது மலசலகூடங்கள் பொதுமக்கள் பாவனைக்கு உகந்தவகையில் மாற்றியமைக்குமாறும் வேலணைப் பிரதேச சபையின் தலைவர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.

முருங்கை பயிர்ச்செய்கையைத் தனது காணியில் மேற்கொள்ளும் சசிகரன் என்பவருடன் சுமுகமாகவும் அவர் கலந்துரையாடினார்.

# அளம்பில் விபத்தில் குடும்பஸ்தர் சாவு!

முல்லைத்தீவு, செப். 19

முல்லைத்தீவு – அளம்பில் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் மாட்டுடன் மோதியதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்களில் வந்த, தண்ணீரூற்று ஹிச்சிராபுரம் பகுதியைச் சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையாரான காங்கேசன் குருபரன் (வயது – 44) என்பவர் விபத்து இடம்பெற்ற இடத்திலேயே மரணமானார்.

விபத்தில் உயிரிழந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

# அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூரில் இல்லை?



கொழும்பு, செப். 19

இலங்கை மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாடு கடத்துமாறு இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளபோதும் – அது இப்போதைக்கு நடக்கும் வாய்ப்பில்லையெனத் தெரிகிறது.

அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூருக்கு வெளியில் இருக்கும் அதேசமயம் தனது நாட்டுப் பிரஜையை உடனடியாக நாடு கடத்துவது என்ற தீர்மானத்தைச் சிங்கப்பூர் அரசு எடுக்கும் வாய்ப்பில்லையெனவும் உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசியல் காரணங்களுக்காக அர்ஜுன் மகேந்திரன் நாடு கடத்தப்படுவது முறையல்ல. சட்ட ரீதியாக அவரிடம் அணுகி விசாரணை மேற்கொள்ளலாம். இது விடயத்தில் மோசமான முன்னுதாரணம் ஒன்றை ஏற்படுத்த சிங்கப்பூர் விரும்பவில்லை.– என உயர்மட்ட இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டார். (ஐ)

## வடக்கு வீதிப் பாதுகாப்பு வாரம் ஒக்ரோபர் 7 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 19

வடமாகாண வீதிபாதுகாப்பு வாரம் எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வடமாகாண சாலைப் பாதுகாப்புச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வு தொடர்பிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வீதிப் பாதுகாப்பு வாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வடமாகாணம் முழுவதும் பல்வேறு மட்டங்களில் வீதிப் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல், பாடசாலைகளில் மாணவ போக்குவரத்துப் பிரிவை ஸ்தாபித்தல், சிறந்த வாகன ஓட்டுநர்களைத் தெரிவு செய்து அவர்களைக் கௌரவித்தல், விபத்துக்கள் குறைந்த பொலிஸ் நிலையங்களைத் தெரிவு செய்தல் மற்றும் வடமாகாணத்தில் விபத்துக்கள் அதிகமான இடங்களை இனங்கண்டு அவ்விடங்களில் போக்குவரத்துப் பொலிஸாரின் மாதிரிகளை காட்சிப்படுத்துதல் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.



இந்தக் கலந்துரையாடலில் வீதி பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், வடமாகாண போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் , வீதி அபிவிருத்தி திணைக்களத்தலைவர் , மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

## சமையல் எரிவாயு விலை 250 ரூபாவால் குறைப்பு

*கொழும்பு, செப். 19*

*12.5 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 250 ரூபாவால் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டது.*

*அமைச்சரவையின் வாழ்க்கைச் செலவு குழு இதனை அறிவித்துள்ளது. (ஐ)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2019 இல் வெளியிடப்பெற்றது.